# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2014 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, இலங்கைச் சமுத்திரப் பல்கலைக்கழகச் சட்டம்*

---

*(2014 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 07 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2014, செத்தெம்பர் மாதம் 12 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 95.00** **தபாற் செலவு : ரூபா 45.00**

***2014 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, இலங்கைச் சமுத்திரப் பல்கலைக்கழகச் சட்டம்***

[*2014 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 07 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.-ஓ. 31/2011*

***இலங்கைச் சமுத்திரப் பல்கலைக்கழகத்தைத் தாபிப்பதற்கும், பேணுவதற்கும், நிருவகிப்பதற்கும் ஏற்பாடு செய்வதற்கும் ; இலங்கைச் சமுத்திரப் பல்கலைக்கழகத்தில் உயர்கல்விக்கு இட்டுச்செல்கின்ற நெறிகளை வசதிப்படுத்துவதில் அவசிய மான சட்ட உள்ளகக் கட்டமைப்பை ஏற்பாடுசெய்வதற்கும் ; 1999 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் தேசிய நிறுவனச் சட்டத்தை நீக்கஞ்செய்வதற்கும் ; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்***

இலங்கையின் கடற்றொழில், கடல்சார் மற்றும் கடலோரத் துறைகளிலான மனிதவலுத் தேவைகளை ஈடுசெய்வதற்கான தேவைப்பாடொன்று உள்ளதாதலாலும் :

அத்துடன் கடற்றொழில், சமுத்திர அறிவியல்கள், கடலோரத் தொழினுட்பவியல்கள் என்ற துறைகளிலும் மற்றும் இணைந்த துறைகளிலும் ஈடுபட்டுள்ள ஆட்களின் அறிவியல்சார், தொழி னுட்ப மற்றும் முகாமைசார் தேர்ச்சிகளை அதிகரிக்கும் நோக்கத் துக்காக உயர்கல்வி நிறுவனமொன்றைத் தாபித்தல் அவசியமாக வுள்ளதாதலாலும் :

அத்துடன் மேலேயுள்ள துறைகளில் கற்கைகளைப் பின்பற்று கின்ற ஆட்களினால் பெறப்பட்ட உயர்கல்வித் தகைமை, இலங்கை யிலும் இலங்கைக்கு வெளியேயும் ஏற்றங்கீகாரத்தைக்கொண்ட தகைமையொன்றாகவிருக்குமென்பதை உறுதிப்படுத்துவது அவசியமாக வந்துள்ளதாதலாலும் :

அத்துடன் மேலேயுள்ள துறைகளில் ஈடுபட்டுள்ள ஆட்களினால் பெறப்பட்ட அறிவு, நாட்டின் அபிவிருத்திக்காகப் பயன்படுத்தப் படுவதற்கென, அத்துறைகளில் அறிவைப் பரப்புவதற்குப் பல்கலைக்கழகமொன்றைத் தாபிப்பது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கருமமொன்றாக வந்துள்ளதாதலாலும்.

2 -PL 008389-875 (2014/08)

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

**1.** இச்சட்டம், 2014 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, இலங்கைச் சமுத்திரப் பல்கலைக்கழகச் சட்டம் என எடுத்துக்காட்டப் படலாமென்பதுடன், (இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தில் ''நியமிக்கப்பட்ட தேதி'' எனக் குறிப்பீடுசெய்யப்படுவதும்), வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறானதுமான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

## பாகம் I

### இலங்கைச் சமுத்திரப் பல்கலைக்கழகத்தைத் தாபித்தல்

இலங்கைச் சமுத்திரப் பல்கலைக் கழகத்தைத் தாபித்தல்.

**2.** (1) ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், (இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தில் ''பல்கலைக்கழகம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படுவதும்), இலங்கைச் சமுத்திரப் பல்கலைக்கழகம் எனவழைக்கப்படுவதுமான பல்கலைக்கழகமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) பல்கலைக்கழகமானது, இடையறாவழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன், (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பெயரினால் வழக்குத்தொடுக்கலாம், அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம்.

பல்கலைக் கழகத்தின் இலச்சினை.

**3.** (1) பல்கலைக்கழக பதிவாளரின் கட்டுக்காப்பிலிருக்க வேண்டிய பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் பல்கலைக்கழகம் முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், இது, பல்கலைக்கழக ஆளுநர் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய முறையில் மாற்றவும்படலாம்.

(2) இலச்சினையானது, பதிவாளரின் அல்லது அதற்கெனத் துணைவேந்தரினால் பெயர்குறித்து நியமிக்கப்படக்கூடிய வாறான வேறெவரேனும் அலுவலரின் முன்னிலையிலன்றி ஏதேனும் சாசனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப் படுதலாகாது ; அவர் தாம் சமுகமளித்திருந்தார் என்பதற்கத் தாட்சியாக அத்தகைய சாசனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

## பாகம் II

**பல்கலைக்கழகத்தின் குறிக்கோள்களும் தத்துவங்களும்**

பல்கலைக் கழகத்தின் குறிக்கோள்கள்.

**4**. பல்கலைக்கழகத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் :-

(அ) கடற்றொழில், சமுத்திர அறிவியல்கள், கடலோரத் தொழினுட்பவியல் மற்றும் இணைந்த துறைகளில் பல்கலைக்கழகக் கல்விக்காக ஏற்பாடுசெய்தல் ;

(ஆ) கடற்றொழில் மற்றும் இணைந்த துறைகளில் ஆள்வலுத் தேவைகளை ஈடுசெய்வதற்கென அத்தகைய துறைகள் தொடர்பாக வாழ்க்கைத் தொழில்சார் மற்றும் தொழி னுட்பக் கற்கைநெறிகளை முனைதல் ;

(இ) கடற்றொழில் மற்றும் இணைந்த துறைகளில் ஈடு பட்டுள்ள ஆட்களிடையே கடற்றொழில், கடல்சார் மற்றும் கடலோரத் துறைகள் தொடர்பாக அறிவைப் பரப்புதல் ;

(ஈ) கடற்றொழில், சமுத்திர அறிவியல்கள், கடலோரத் தொழினுட்பவியல் மற்றும் இணைந்த துறைகளில் தொடர்ச்சியான உயர்தொழில்சார் அபிவிருத்திக்காக விசாலிப்புநெறிகளை வழங்குதல் ;

(உ) பல்கலைக்கழக அனுமதிக்கென கடற்றொழில் மற்றும் இணைந்த துறைகளைச் சேர்ந்த ஆளணியினருக்கு வாழ்க்கைத்தொழில்சார் மற்றும் தொழினுட்ப கற்கை நெறிகளை வழங்குதல் ;

(ஊ) கடற்றொழில், சமுத்திர அறிவியல்கள், கடலோரத் தொழினுட்பவியல் மற்றும் இணைந்த துறைகளில் பொறியியல், அறிவியல்சார் தொழினுட்ப மற்றும் வாழ்க்கைத்தொழில்சார் கல்வி அத்துடன் பயிற்சி முறைமைகள் என்ற துறைகளைச் சேர்ந்த மாணவர்கள், பல்கலைக்கழகக் கல்வியைப் பெறுவதற்கு அவர்களின் இயற்கைத்திறமை மற்றும் ஆற்றல் என்பவற்றின் அடிப் படையில், அவர்களின் படிப்படியான அபிவிருத்திக் காக ஏற்பாடுசெய்தல் ; அத்துடன்

(எ) கடற்றொழில், சமுத்திர அறிவியல்கள், கடலோரத் தொழினுட்பவியல் மற்றும் இணைந்த துறைகளில் தேசிய வாழ்க்கைத் தொழில்சார் தகைமைகளையுடைய வர்களுக்குக் கற்கைநெறிகளை வழங்குதல் மற்றும் அவர்களின் தகுதித்திறனைத் தரமுயர்த்தி கல்விசார் தகைமைகளைப் பெறுவதற்கு அவர்களுக்கு உதவுதல்.

பல்கலைக் கழகத்தின் தத்துவங்கள்.

**5**. (1) பல்கலைக்கழகமானது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக் கமைய, பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனத்தைக் கொள் வனவு என்றவகையாக அல்லது வேறுவகையாகக் கொள்ளுதல் மற்றும் அத்தகைய கொள்வனவின் பயனாக அல்லது வேறுவகையாக அதற்குரித்தாக்கப் பட்டதாக வரக்கூடிய அத்தகைய ஏதேனும் ஆனத்தை எடுத்தல், ஏற்றுக்கொள்ளுதல் அத்துடன் வைத்திருத் தல் ;

ஆயின், பல்கலைக்கழகத்தின் ஏதேனும் அசைவற்ற ஆதனம், திறன்கள் அபிவிருத்தி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சரின் எழுத்திலான முன்னங்கீகாரமின்றி கையுதிர்க்கப்படுதலாகாது ;

(ஆ) இச்சட்டத்தினால் பல்கலைக்கழகத்துக்கு அளிக்கப்படு கின்றவாறான அல்லது அதன்மீது சுமத்தப்படுகின்ற வாறான அல்லது அதற்குக் குறித்தளிக்கப்படுகின்ற வாறான அத்தகைய தத்துவங்களை, பணிகளை மற்றும் கடமைகளைப் பிரயோகித்தல், புரிதல் அத்துடன் நிறைவேற்றுதல் ;

(இ) *23 ஆம் பிரிவின்கீழ் அனுமதிப்பு, தராதர அங்கீகார மற்றும் தர உறுதிப்பாட்டுப் பேரவையினால் விதப்புரைக்கப்பட்டவாறாக திறமைச் சோதனைக்கிணங்க வேறுபட்ட வகையினதான பரீட்சார்த்திகளுக்கான அனுமதி கட்டளைகளுக்கிசைவாக மாணவர்களை அனுமதித்தலும், பல்கலைக்கழகத்தின் குறிக்கோள்களுக்கிசைய திட்டமிடப்பட்ட கற்கைநெறிகளுக்கு மற்றும் போதனைகளை வழங்குதல் ;*

(ஈ) *பல்கலைக்கழகத்துக்கு மாணவர்களை அனுமதிக்கும் நோக்கத்துக்காக, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் பல்கலைக்கழகத்தின் மற்றும் உயர்கல்வி நிறுவனத்தின் மற்றும் தொழினுட்ப வாழ்க்கைத் தொழில்சார் அல்லது உயர்தொழில்சார் நிறுவனத்தின் பரீட்சைகளையும் கல்விசார் கற்கைக் காலப்பகுதிகளையும் ஏற்றங்கீகரித்தல் ;*

(உ) *கடற்றொழில் மற்றும் சமுத்திர அறிவியல்கள், கடலோரத் தொழினுட்பவியல் மற்றும் இணைந்த துறைகள் என்பன தொடர்பான கற்கை நிகழ்ச்சித் திட்டங்களையும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் நடாத்துதல் ;*

(ஊ) *பந்தி (உ) இல் குறித்துரைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களில் பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் அத்தகைய மாணவர்களின் செயல் நிறைவேற்றத்தை மதிப்பீடு செய்தல் ;*

(எ) *அத்தகைய நோக்கத்துக்காக இயற்றப்பட்ட ஏதேனும் நியதிச் சட்டத்துக்கிசைந்தொழுகப் பட்டங்களையும் வேறு கல்விசார் திறமைகளையும் வழங்குதல் மற்றும் அளித்தல் ;*

(ஏ) தேசிய கடற்றொழில் மற்றும் கடலோரப் பயிற்சி நிறுவகம் உள்ளடங்கலான தொடர்புபட்ட துறைகளி லான வாழ்க்கைத் தொழில்சார் பயிற்சிக்கான நிறுவனங்களைத் தாபித்தல். கடற்றொழில் மற்றும் கடலோரப் பயிற்சி நிறுவகமானது நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் தாபிக்கப்படுதல் வேண்டும் ;

(ஐ) மாகாண மற்றும் பிராந்திய அடிப்படையில் பல்கலைக் கழகத்தின் நிலையங்களையும் வளாகங்களையும் தாபித்தல் ;

(ஒ) பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்ட கற்கைநெறி களுக்காகவும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காகவும் கட்டணங்களை அல்லது வேறெவையேனும் கொடுப் பனவுகளை விதித்தல் ;

(ஓ) விடயத்துக்கேற்ப பொதுமக்களுக்கு அல்லது ஏதேனும் நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட எவையேனும் விசா லிப்புச் சேவைகளுக்கான கட்டணங்களை விதித்தல் மற்றும் அவ்வாறு தோற்றுவிக்கப்பட்ட வருமானத்தை, பல்கலைக்கழகத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காக, கட்டளைச் சட்டத்தினால் விதித்துரைக்கப்படவேண்டிய வாறான அத்தகைய முறையில் செலவழித்தல் ;

(ஔ) மதியுரைசார், ஆலோசனைசார் மற்றும் ஏதேனும் வருமானம் தோற்றுவிக்கும் பணிகளைப் பொறுப் பேற்றல் மற்றும் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் திட்டத்தின் அபிவிருத்திக்காக அவற்றி லிருந்தான வரும்படிகளைச் செலவழித்தல் ;

(க) பல்கலைக்கழகத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறாக, கணக்காய்வு மற்றும் முகாமைக் குழுவுட்பட்ட ஏதேனும் குழுவை அல்லது உபகுழுவைத் தாபித்தல் ;

(ங) சபை தோதானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய முறையில் பல்கலைக்கழகத்தின் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப்படாத ஏதேனும் நிதியத்தை முதலீடுசெய்தல் ;

(ச) பல்கலைக்கழகத்தின் குறிக்கோள்களை அல்லது அக்கறைகளை ஒத்த குறிக்கோள்களை அல்லது அக்கறைகளைக் கொண்டவையும், இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே உள்ளவையுமான வேறு நிறுவனங்களுடன், ஆசிரியர்களையும், மாணவர் களையும், கல்விமான்களையும் பரிமாற்றுதல் என்ற வகையாக ஒத்துழைத்தல் ;

(ஞ) இணைந்த நிறுவனங்களிலுள்ள ஆட்களுக்கான பரீட்சை களை நடாத்துவதற்கான ஒழுங்கேற்பாடுகளைச் செய்தல் மற்றும் பல்கலைக்கழகத்தில் போதனைகளைப் பெறாதுள்ள ஆட்கள், பல்கலைக்கழகத்திடமிருந்து பட்டங்களையும், திப்புளோமாக்களையும், சான்றிதழ் களையும் பெறுவதனையும் இயலச்செய்தல் அத்துடன் அத்தகைய பரீட்சைகளுக்கான போதனை நெறிகளைத் தீர்மானித்தல் ;

(ட) பல்கலைக்கழகத்தினால் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஆட்களுக்கு உயர்கல்விக்கான வசதிகளை வழங்குதல் ;

(ண) பல்கலைக்கழகத்தின் பணியாட்டொகுதியினருக்கும் மாணவர்களுக்கும் ஆராய்ச்சிக்கான வாய்ப்புக்களைக் கிடைக்கக்கூடியனவாக்குதல் மற்றும் அதன்மூலம் அறிவை முன்னெடுத்துச் செல்லுதல் அத்துடன் பரப்புதல் ;

(த) அந்நோக்கத்துக்காக ஆக்கப்பட்ட ஏதேனும் நியதிச் சட்டத்துக்கு இசைந்தொழுக, கல்விப் பேரவையினாலும் சபையினாலும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்களுக்குக் கௌரவப் பட்டங்களை அல்லது வேறு திறமைச்சித்தி களை அளித்தல் ;

(ந) அந்நோக்கத்துக்காக ஆக்கப்பட்ட ஏதேனும் நியதிச் சட்டத்துக்கு இசைந்தொழுக, ஆதரவுதியங்கள், புலமைப் பரிசில்கள், பணவுதவிகள், பதக்கங்கள் மற்றும் வேறு பரிசில்கள் என்பவற்றை வழங்குதல் ;

(ப) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படக்கூடிய வாறு, சிரேட்ட பேராசிரியர் பதவிகள், பேராசிரியர் பதவிகள், இணைப் பேராசிரியர் பதவிகள், சிரேட்ட விரிவுரையாளர் பதவிகள், விரிவுரையாளர் பதவிகள், உதவி விரிவுரையாளர் பதவிகள் மற்றும் வேறு கல்வி சாராப் பதவிகள் என்பவற்றை அறிமுகப்படுத்துதல் ;

(ம) இச்சட்டத்தின் நோக்கங்களுக்கு அவசியமாகக்கூடிய வாறு, போதனைசார் நோக்கங்களுக்காக நூலகங்களை யும், ஆய்வுகூடங்களையும், வேறு கட்டிடங்களையும் தாபித்தல் மற்றும் பேணுதல் ;

(ய) இச்சட்டத்தின் கீழான குறிக்கோள்களை எய்தும் நோக்கத்துக்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல், தொழிலுக்கமர்த்துதல், அவர்களுக்கு ஊதியமளித்தல் மற்றும் அவர்களின்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல் மற்றும் அவர்களைப் பதவியிலிருந்து நீக்குதல் ;

(ர) பல்கலைக்கழகத்தின் அலுவலர்களினதும் சேவை யாளர்களினதும் நன்மைக்காகச் சகாய நிதியத்திட்டங் களை அல்லது ஓய்வூதியத் திட்டங்களை தாபித்தல் மற் றும் ஒழுங்குபடுத்துதல் அத்துடன் அத்தகைய ஏதேனும் திட்டத்துக்கு உதவுதொகைகளைச் செலுத்துதல் ;

(ல) இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் வங்கியில் அல்லது வங்கிகளில் வங்கிக் கணக்குகளைத் திறத்தல், தொழிற்படுத்துதல் மற்றும் மூடிவிடுதல் ; அத்துடன்

(வ) இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசிய மாகக்கூடியவாறான வேறெல்லாச் செயல்களையும் அல்லது காரியங்களையும் செய்தல்.

(2) மேலே எடுத்துக்கூறுப்பட்ட தத்துவங்கள், இச்சட்டத்தினால் வேறுவகையில் வெளிப்படையாக ஏற்பாடுசெய்யப்பட்டா லொழிய, ஆளுநர்கள் சபையினால் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

## பாகம் III

### அமைச்சரின் தத்துவங்கள்

அமைச்சரின் பொறுப்பும் தத்துவங்களும்.

**6**. (1) அமைச்சர், இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிருவகிப்பதற்கும் செயற்படுத்துவதற்கும் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

(2) அமைச்சர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவரது பொறுப்புகளை நிறைவேற்றுகையில், பல்கலைக்கழகத்தின் துணை வேந்தரின் கலந்தாலோசனையுடன் பல்கலைக்கழகத்தின் சீரான பணியாற்றுகைக்கு அவசியமென அவர் கருதக்கூடியவாறான எழுத்திலான பணிப்புகளைக் காலத்துக்குக்காலம் சபைக்கு வழங்கலாம்.

(3) இப்பிரிவின்கீழ் அமைச்சரினால் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணிப்புகளுக்கும் இணங்கியொழுகுதல் சபையின் கடமையாதல் வேண்டும்.

(4) அமைச்சர், காலத்துக்குக்காலம், இச்சட்டத்தை நிருவகித்தல் மற்றும் செயற்படுத்துதல் தொடர்பான அவரது பொறுப்புகளைப் பயனுற நிறைவேற்றும் நோக்கத்துக்காகப் பல்கலைக்கழகத்தின் நிருவாகம் பற்றிய செயற்பாடுகள் எல்லாம் அல்லது அவற்றுள் எவையும் சபையினால் நுண்ணாய்வு செய்யப்பட்டு அவருக்கு அறிக்கையிடப்படுதல் வேண்டுமெனக் கட்டளையிடலாம்.

(5) நான்காம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்றுக்கு இணங்கியொழுகச் சபையிடமிருந்து ஓர் அறிக்கை பெறப்படுவதன்மேல், அமைச்சர், அவ்வறிக்கையைக் கவனத்துட் கொண்டதன்மீது, (4) ஆம் உட்பிரிவின்கீழான நுண்ணாய்வொன்று நிறைவேற்றப்பட்டுள்ள பல்கலைக்கழகத்தின் நிருவாகம் பற்றிய செயற்பாடு தொடர்பாகத் தோதானதென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய பரிகரிப்பு நடவடிக்கையை எடுக்கும்படி சபையைப் பணித்தல் வேண்டும்.

*நிலவுகின்ற நிலைமை, தேசியப் பாதுகாப்பு முதலிய வற்றுக்கு அபாய மேற்படுத்தும் சாத்தியம் கொண்டதாக விருக்குமிடத்து.*

**7.** பல்கலைக்கழகத்தில் நிலவுகின்ற ஏதேனும் நிலைமை, தேசியப் பாதுகாப்புக்கு அபாயமேற்படுத்தும் சாத்தியம் கொண்டதாகவுள்ளது அல்லது தேசிய கொள்கைக்குத் தீங்குவிளைவிக்கக் கூடியது அல்லது பங்கம் விளைவிக்கக்கூடியது அல்லது பல்கலைக்கழகத்தின் சீரான பணியாற்றுகையைக் குலைக்கும் சாத்தியம் கொண்டது என அமைச்சர் கருதுமிடத்து, அத்தகைய நிலைமையைக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவருவதற்கு அவசியமாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய எல்லா நடபடிகளையும் எடுக்கும்படி சபையை அவர் பணித்தல் வேண்டும்.

*ஒரு கதவடைப்பு முதலியன ஏற்படும் பட்சத்தில் அமைச்சரினால் எடுக்கப்பட வேண்டிய வழிமுறைகள்.*

**8.** (1) ஏதேனும் விரிவுரைப் பகிஷ்கரிப்பு, கதவடைப்பு அல்லது அத்தகைய எவையேனும் சூழ்நிலைகள் காரணமாகப் பல்கலைக் கழகத்தின் பணி அல்லது நிருவாகம் பாரதூரமான முறையில் குலைக்கப்பட்டுள்ளதென்றும், பல்கலைக்கழகத்தின் இயைபான அதிகாரிகள் வழமையான நிலைமைகளை மீட்டெடுப்பதற்குத் தவறியுள்ளனரென்றும் அமைச்சர் கருதுமிடத்து, பல்கலைக் கழகத்தை வழமையான நிலைமைகளுக்கு மீட்டெடுப்பதனை உறுதிப்படுத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா வழிமுறைகளையும் அவர் எடுத்தல் வேண்டும். அமைச்சர் வழமையான நிலைமை மீட்டெடுக்கப்படுவதற்கு முன்னர் எந்நேரத்திலும், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் தோதானவையென அவர் கருதக் கூடியவாறான அத்தகைய ஏற்பாடுகளைச் செய்யலாம் :-

(அ) பல்கலைக்கழகத்தை மூடிவிடுதல் ;

(ஆ) பல்கலைக்கழகத்தின் அலுவலருக்கு, அதிகாரிக்கு அல்லது வேறு குழுவுக்குப் பதிலாக, இச்சட்டத்தின் கீழான ஏதேனும் தத்துவத்தை, பணியை அல்லது கடமையைப் பிரயோகிக்கும், புரியும் அல்லது நிறைவேற்றும் நோக்கத்துக்காகத் தகுதிவாய்ந்த அதிகாரியொருவராகவிருப்பதற்கு எவரேனுமாளைப் பெயரினால் அல்லது பதவியினால் நியமித்தல் ;

(இ) பந்தி (அ)வில் அல்லது (ஆ)வில் குறித்துரைக்கப்பட்ட கருமங்களுள் எவற்றுடனும் சம்பந்தப்பட்டுள்ள அல்லது அவை தொடர்பான வேறேதேனும் கருமம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்று அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று வலுவுக்கு வருதல் வேண்டுமென்பதுடன், வர்த்தமானி வெளியிடப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள் பாராளுமன்றத்தில் பட்டியலிலிடப்படுதலும் வேண்டும். கட்டளையானது முன்னரே ஒழிக்கப்பட்டாலொழிய, அதிலிருந்து மூன்று மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு வலுவிலிருத்தல் வேண்டும்.

*பல்கலைக் கழகத்தின் ஆண்டறிக்கை.*

**9**. (1) பல்கலைக்கழகமானது, ஒவ்வொரு நிதியாண்டினதும் முடிவுக்குப் பின்னர் ஆறு மாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதி முடிவுறுமுன்னர், அவ்வாண்டின்போது அதன் செயற்பாடுகள் பற்றிய முழுமையான விபரத்தைக் கொண்டுள்ள அறிக்கையொன்றை அமைச்சரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அதன் பிரதிகள் பாராளுமன்றத்தில் பட்டியலிலிடப்படுவதனை அமைச்சர் செய்வித்தல் வேண்டும்.

(2) பல்கலைக்கழகமானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரதிகள் பல்கலைக்கழகத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான கட்டணக் கொடுப்பனவின்மீது பொதுமக்களுக்குக் கிடைக்கக்கூடியனவாக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

## பாகம் IV

### பல்கலைக்கழகத்தின் வேந்தரும் அலுவலர்களும்

*பல்கலைக் கழகத்தின் வேந்தரும் அலுவலர்களும்.*

**10**. (1) பல்கலைக்கழகத்தின் தலைவராகவிருக்கவேண்டிய பல்கலைக்கழகத்தின் வேந்தரை சனாதிபதி நியமித்தல் வேண்டும்; அவர் அத்தகைய நியமனத் தேதியிலிருந்து ஐந்தாண்டுகளைக் கொண்ட காலப்பகுதியொன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(2) வேந்தர் சமுகமாகவிருக்கும்போது, பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பட்டமளிப்பு விழாவுக்கும் தலைமைதாங்குதல் வேண்டும்.

(3) பல்கலைக்கழகத்தின் அலுவலர்கள் பின்வருவோராதல் வேண்டும் :-

(அ) துணைவேந்தர் ;

(ஆ) பிரதித் துணைவேந்தர் (இருப்பின்) ;

(இ) ஒவ்வொரு வளாகத்தினதும் பல்கலைக்கழக முகவர்;

(ஈ) ஒவ்வொரு பீடத்தினதும் பீடாதிபதி ;

(உ) பல்கலைக்கழகத்தின் பதிவாளர் ;

(ஊ) ஊடகத்துறை மற்றும் தகவல் சேவைகள் பணிப்பாளர்;

(எ) நிதிப் பணிப்பாளர் ;

(ஏ) அனுமதிப்பு, தராதர அங்கீகார மற்றும் தர உறுதிப்பாட்டுப் பேரவையின் பணிப்பாளர் ; அத்துடன்

(ஐ) பல்கலைக்கழக அலுவலரொருவரின் பதவியொன்றென ஏதேனும் நியதிச்சட்டத்தினால் வெளிப்படுத்தப்பட்டவொரு பதவியை வகிக்கின்ற எவரேனுமாள்.

துணைவேந்தர்.

**11.** (1) பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், சபையினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட மூன்றாட்களைக் கொண்டவொரு குழாத்திலிருந்து அமைச்சரின் கலந்தாலோசனையுடன் சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்துக்காகப் பெயர்குறித்து நியமிக்கப்படவேண்டிய மூன்றாட்களைக்கொண்ட குழாம், எந்திரவியல், கடற்றொழில், அறிவியல், தொழினுட்பவியல், முகாமைத்துவம் என்ற துறைகளில் அல்லது வேறேதேனும் இயைபான துறையில் கல்விசார் தகைமைகளையும், அறிவையும், அனுபவத்தையும் கொண்டுள்ளவர்களிலிருந்து தெரிவுசெய்யப்படுதல் வேண்டும்.

(3) துணைவேந்தர் நான்காண்டுகளைக்கொண்ட காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டும் ; எவ்வாறாயினும், அடுத்தடுத்துவரும் இரு பதவிக்காலங்களுக்கு மேற்பட ஆளொருவர் துணைவேந்தராக நியமிக்கப்படுதலாகாது.

(4) துணைவேந்தர் பல்கலைக்கழகத்தின் முழுநேர அலுவலராகவிருத்தல் வேண்டுமென்பதுடன், அதன் பிரதான நிறைவேற்றலுவலராகவும் பிரதான கல்விசார் அலுவலராகவும் இருத்தலும் வேண்டும். அவர், சபையினதும் கல்விப் பேரவையினதும் பதவிவழி உறுப்பினராகவும் தவிசாளராகவும் இருத்தல் வேண்டும். துணைவேந்தர், கட்டளைச்சட்டத்தினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறாகப் பல்கலைக்கழகத்தின் அல்லது வேறு குழுவின் ஏதேனும் கூட்டத்தைக் கூட்டுவதற்கும், அதில் சமுகமாகவிருப்பதற்கும், உரையாற்றுவதற்கும் உரித்துடையவராதல் வேண்டும், ஆனால் அவர் அத்தகைய வேறு அதிகாரசபையின் அல்லது வேறு குழுவின் உறுப்பினரொரு வராகவிருந்தாலொழிய, அத்தகைய ஏதேனும் கூட்டத்தில் வாக்களிப்பதற்கு உரித்துடையவராதலாகாது.

(5) சபையினால் அதற்கெனத் துணைவேந்தருக்குக் காலத்துக் குக்காலம் சட்டமுறையாக வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளுக்கிணங்க, இச்சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாசனத்தினதும் ஏற்பாடுகள் உரியமுறையில் கடைப்பிடிக்கப் படுவதனை உறுதிப்படுத்துவது அவரது கடமையாதல் வேண்டு மென்பதுடன் அந்நோக்கத்திற்கு அவசியமென அவர் கருதக் கூடியவாறான அத்தகைய எல்லாத் தத்துவங்களையும் அவர் கொண்டிருத்தலும் வேண்டும் ; அத்துடன் அவற்றைப் பிரயோகிக் கலாம்.

(6) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, சபையினதும் கல்விப் பேரவையினதும் முடிபுகளுக்குப் பயன்கொடுப்பதும் பயன் கொடுக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதும் துணைவேந்தரின் கடமையாதல் வேண்டும்.

(7) துணைவேந்தர் பல்கலைக்கழகத்தின் கணக்கீட்டலுவல ராகவிருத்தல் வேண்டுமென்பதுடன், பல்கலைக்கழகத்தினுள் ஒழுக்காற்றைப் பேணுவதற்கும் பொறுப்பாகவிருத்தலும் வேண்டும்.

(8) துணைவேந்தர், அவர் முன்னரே பதவியை வறிதாக்கி னாலொழிய அல்லது இப்பிரிவின் (9) ஆம் உட்பிரிவின்கீழ் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, அவர் அறுபத்தைந்து வயதைப் பூர்த்திசெய்யும்வரை அல்லது அவரது பதவிக்காலம் முடிவுறும்வரை, இவற்றுள் எது முந்தியதோ அதுவரை, பதவி வகித்தல் வேண்டும்.

(9) துணைவேந்தர், குறித்தளிக்கப்படும் காரணங்களுக்காகச் சனாதிபதியினால் பதவியிலிருந்து அகற்றப்படலாம்.

(10) துணைவேந்தர் லீவு, சுகவீனம், இலங்கையில் இல்லாமை என்ற காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காகத் தமது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாகப் புரிவதற்கு இயலாதவராகவிருக்குமிடத்து, பிரதித் துணைவேந்தர் எவரேனுமிருப்பின் அவர், துணைவேந்தரின் சார்பில் அத்தகைய கடமைகளைப் புரிதல் வேண்டும். பிரதித் துணைவேந்தரொருவர் கிடைக்கக்கூடியவராக இல்லாதிருப்பின், அமைச்சர், சபையின் விதப்புரையின்மீது, அத்தகைய இயலாமை ஏற்பட்டதிலிருந்து ஏழு நாட்களினுள், பதவிக்குரிய கடமைகளைக் கொண்டு நடாத்துவதற்குத் தகுதியானவையென அவர் கருதக்கூடிய வாறான அத்தகைய ஒழுங்கேற்பாடுகளைச் செய்தல் வேண்டும். பல்கலைக்கழகத்தின் பதிவாளர், அத்தகைய ஒழுங்கேற்பாடுகள் செய்யப்படும்வரை, துணைவேந்தரின் பதவிக்குரிய வழக்கமுறையான கடமைகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

(11) துணைவேந்தரின் பதவியில் ஏதேனும் வெற்றிடம் ஏற்படுமிடத்து, சனாதிபதி, அத்தகைய வெற்றிடம் ஏற்பட்டதிலிருந்து ஏழு நாட்களினுள், நிரந்தரமான நியமனமொன்று செய்யப்படும்வரை அப்பதவிக்குரிய கடமைகளைக் கொண்டு நடாத்துவதற்கு அவர் தகுதியானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய ஒழுங்கேற்பாட்டைச் செய்யலாம். அத்தகைய ஒழுங்கேற்பாடுகள் செய்யப்படும்வரை, பல்கலைக்கழகத்தின் பதிவாளர் துணைவேந்தர் பதவியின் வழக்கமுறையான கடமைகளைக் கொண்டுநடாத்துதல் வேண்டும்.

பல்கலைக் கழகத்தின் பிரதித் துணைவேந்தர்.

**12**. பல்கலைக்கழகத்தின் பிரதித் துணைவேந்தரொருவர், ஒரு தெரிவுக் குழுவின் விதப்புரையின்மீது சபையினால் நியமிக்கப் படுதல் வேண்டும் ; அக்குழுவின் அமைப்பு, கட்டளைச் சட்டத்தினால் விதந்துரைக்கப்படுதல் வேண்டும். நியமிக்கப்படுவதன் மேல் பிரதித் துணைவேந்தர், துணைவேந்தரின் பணிப்பின்கீழ் பல்கலைக்கழகத்தின் முழுநேர அலுவலரொருவராகப் பணியாற்றுதல் வேண்டும். பிரதித் துணைவேந்தரின் கடமைகள் மற்றும் பணிகள் எவையேனுமிருப்பின் அவைபற்றி சபை முடிபு செய்தல் வேண்டும்.

ஒரு பீடத்தின் பீடாதிபதி.

**13.** (1) ஒவ்வொரு பீடத்துக்கும் பீடாதிபதியொருவர் இருத்தல் வேண்டும்; அவரே அத்தகை பீடத்தின் கல்விசார் மற்றும் நிருவாகத் தலைவராகவிருத்தல் வேண்டும். அத்தகைய பீடத்தின் உறுப்பினர்களாகவுள்ள சிரேஷ்ட பேராசிரியர்கள், பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் என்போரிலிருந்து பீடாதிபதி பீடத்தினால் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(2) பீடாதிபதி, ஏதேனும் தோதான சாசனத்தின் ஏற்பாடுகளுக்கமைய, அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட தேதியிலிருந்து கணிக்கப்பட்ட மூன்றாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பதவியை வகிப்பதற்குத் தகைமையற்றவராகவிருந்தாலொழிய, மீளத்தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும். எவ்வாறாயினும் அவர் அடுத்துவரும் இரு பதவிக்காலங்களுக்கு மேற்பட எச்சந்தர்ப்பத்திலும் பதவி வகித்தலாகாது.

(3) இச்சட்டத்தின் 59 ஆம் பிரிவின்கீழ் பல்கலைக்கழகத்தின் அலுவலரொருவராகத் தொடர்ந்து பணியாற்றுவதற்குத் தகைமையற்றவராகவுள்ள பீடமொன்றின் பீடாதிபதி அத்தகைய பதவியிலிருந்து அகற்றப்படுதல் வேண்டும்.

(4) வராமை, லீவு, சுகவீனம் அல்லது வேறு காரணமாக ஒரு பீடத்தின் பீடாதிபதி மூன்றுமாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்குத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவிருக்குமிடத்து, துணைவேந்தர், அத்தகைய காலப்பகுதிக்குப் பீடாதிபதியின் பதவியில் செயலாற்றவென, அப்பீடத்தின் ஒரு சிரேஷ்ட பேராசிரியரை, பேராசிரியரை, இணைப்பேராசிரியரை அல்லது சிரேஷ்ட விரிவுரையாளரொருவரை நியமித்தல் வேண்டும்.

(5) ஒரு பீடத்தின் பீடாதிபதி அகற்றப்படுமிடத்து, இளைப்பாறுமிடத்து பதவியிலிருந்து நீங்குமிடத்து அல்லது மூன்று மாதங்களை விஞ்சுகின்றவொரு காலப்பகுதிக்கு வேறேதேனும் காரணத்துக்காகத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்கு இயலாதவராகவிருக்குமிடத்து, பீடத்தின் பீடாதிபதி பதவி வறிதாக வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கப் புதிய பீடாதிபதியொருவர் தேர்ந்தெடுக்கப்படுதலும் வேண்டும். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆள் அவருக்கு முன்னிருந்தவரின் பதவிக் காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

பல்கலைக் கழகத்தின் பதிவாளர்.

**14.** (1) பல்கலைக்கழகத்தின் பதிவாளர், ஒரு தெரிவுக் குழுவின் விதப்புரையின்மேல் சபையினால் நியமிக்கப்படுதல் வேண்டும் ; அக்குழுவின் அமைப்பு, கட்டளைச் சட்டத்தினால் விதித்துரைக் கப்படுதல் வேண்டும் ; அவர் பல்கலைக்கழகத்தின் முழுநேர அலுவலராகப் பணியாற்றுதல் வேண்டும். பதிவாளர், பல்கலைக் கழகத்தின் உதவிக் கணக்கீட்டலுவலராகவுமிருத்தல் வேண்டும்.

(2) பதிவாளரானவர் -

(அ) துணைவேந்தரின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, பல்கலைக்கழகத்தின் பொது நிருவாகத்துக்கும் அதன் கல்விசாராப் பணியாட்டொகுதியின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கும் பொறுப்பாகவிருத்தல் வேண்டும் ;

(ஆ) பல்கலைக்கழகத்தின் பதிவேடுகளுக்கும் ஆதனங்களுக் கும் பொறுப்பாகவிருத்தல் வேண்டும் ;

(இ) இச்சட்டத்தினால் அல்லது தோதான ஏதேனும் சாசனத்தினால் அவருக்கு அளிக்கப்படக்கூடிய வாறான அல்லது அவர்மீது சுமத்தப்படக்கூடிய வாறான அல்லது அவருக்குக் குறித்தளிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய தத்துவங்களையும், கடமைகளை யும், பணிகளையும், பிரயோகித்தலும், நிறைவேற்றுத லும், புரிதலும் வேண்டும்.

ஊடகத்துறை மற்றும் தகவற் சேவைகள் பணிப்பாளர்.

**15.** (1) பல்கலைக்கழகத்தின் ஊடகத்துறை மற்றும் தகவற் சேவைகள் பணிப்பாளர், ஒரு தெரிவுக் குழுவின் விதப்புரையின் மீது சபையினால் நியமிக்கப்படுதல் வேண்டும் ; அக்குழுவின் அமைப்பு, கட்டளைச் சட்டத்தினால் விதித்துரைக்கப்படுதல் வேண்டும் ; அவர் பல்கலைக்கழகத்தின் முழுநேர அலுவலராகப் பணியாற்றுதல் வேண்டும்.

(2) ஊடகத்துறை மற்றும் தகவற் சேவைகள் பணிப்பாளர் -

(அ) துணைவேந்தரின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, பல்கலைக்கழகத்தின் ஊடகத்துறை மற்றும் தகவல் நிலையத்தின் அல்லது நிலையங்களின் பொது நிருவாகத்துக்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தினால் அல்லது தோதான ஏதேனும் சாசனத்தினால் அவருக்கு அளிக்கப்படக்கூடியவாறான அல்லது அவர்மீது சுமத்தப்படக்கூடியவாறான அல்லது அவருக்குக் குறித்தளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

நிதிப் பணிப்பாளர்.

**16.** (1) பல்கலைக்கழகத்தின் நிதிப் பணிப்பாளர், ஒரு தெரிவுக் குழுவின் விதப்புரையின்மீது சபையினால் நியமிக்கப்படுதல் வேண்டும் ; அக்குழுவின் அமைப்பு, கட்டளைச் சட்டத்தினால் விதித்துரைக்கப்படுதல் வேண்டும் ; அவர் பல்கலைக்கழகத்தின் முழுநேர அலுவலராகப் பணியாற்றுதல் வேண்டும்.

(2) நிதிப் பணிப்பாளர் -

(அ) துணைவேந்தரின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, பல்கலைக்கழகத்தின் நிதிகளினது பொது நிருவாகத்துக்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், கட்டளைச் சட்டத்தினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் அதன் கணக்குகளைப் பேணுதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தினால் அல்லது தோதான ஏதேனும் சாசனத்தினால் அவருக்கு அளிக்கப்படக்கூடியவாறான அல்லது அவர்மீது சுமத்தப்படக்கூடியவாறான அல்லது அவருக்குக் குறித்தளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

(3) நிதிப் பணிப்பாளர், பல்கலைக்கழகத்தின் எல்லா நிதிகளினதும் கட்டுக்காப்பைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*அனுமதிப்பு, தராதர அங்கீகார மற்றும் தர உறுதிப் பாட்டுப் பேரவையின் பணிப்பாளர்.*

**17.** (1) பல்கலைக்கழகத்தின் அனுமதிப்பு, தராதர அங்கீகார மற்றும் தர உறுதிப்பாட்டுப் பேரவையின் பணிப்பாளர், ஒரு தெரிவுக்குழுவின் விதப்புரையின்மீது சபையினால் நியமிக்கப் படுதல் வேண்டும் ; அக்குழுவின் அமைப்பு, கட்டளைச் சட்டத் தினால் விதித்துரைக்கப்படுதல் வேண்டும். அனுமதிப்பு, தராதர அங்கீகார மற்றும் தர உறுதிப்பாட்டுப் பேரவையின் பணிப்பா ளர், பல்கலைக்கழகத்தின் முழுநேர அலுவலராகப் பணியாற்று தல் வேண்டும்.

(2) அனுமதிப்பு, தராதர அங்கீகார மற்றும் தர உறுதிப்பாட்டுப் பேரவையின் பணிப்பாளர் -

(அ) துணைவேந்தரின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, அனுமதிப்புக் கட்டளைக்கற்கைகளுக்கும், பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் கற்கை நெறி களினதும் ஏனைய ஆதரவளிக்கும் சேவைகளினதும் தர உறுதிப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கும் பொறுப் பாகவிருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தினால் அல்லது தோதான ஏதேனும் சாசனத்தினால் அவருக்கு அளிக்கப்படக்கூடிய வாறான அல்லது அவர்மீது சுமத்தப்படக்கூடிய வாறான அல்லது அவருக்குக் குறித்தளிக்கப்படக் கூடியவாறான அத்தகைய தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

## பாகம் V

### பல்கலைக்கழகத்தின் அதிகாரசபைகள்

*பல்கலைக் கழகத்தின் அதிகார சபைகள்.*

**18.** பல்கலைக்கழகத்தின் அதிகாரசபைகள் பின்வருவனவாதல் வேண்டும் :-

(அ) ஆளுநர் சபை ;

(ஆ) அனுமதிப்பு, தராதர அங்கீகார மற்றும் தர உறுதிப் பாட்டுப் பேரவை ;

(இ) கல்விப் பேரவை ;

(ஈ) பீடச் சபைகள் ; அத்துடன்

(உ) பல்கலைக்கழகத்தின் அதிகாரசபைகளாகவிருக்கின்றனவெனக் கட்டளைச் சட்டங்களினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு குழுக்கள்.

பல்கலைக் கழகத்தின் ஆளுநர் சபை.

**19.** (1) (இச்சட்டத்தின் “சபை” எனக் குறிப்பீடு செய்யப்படும்) பல்கலைக்கழகத்தின் ஆளுநர் சபை பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள் :-

(i) துணைவேந்தர் ;

(ii) பிரதித் துணைவேந்தர், எவரேனுமிருப்பின் அவர் ;

(iii) ஒவ்வொரு பீடத்தினதும் பீடாதிபதி ;

(iv) ஏதேனும் கட்டளைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஒவ்வொரு நிறுவகத்தினதும் பணிப்பாளர்;

(v) திறன்கள் அபிவிருத்தி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(vi) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(vii) உயர்கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(viii) கப்பற்றொழில் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(ix) அறிவியல் மற்றும் தொழினுட்பவியல் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(x) கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(xi) ஒவ்வொரு வளாகத்தினதும் பல்கலைக்கழக முகவர் எவரேனுமிருப்பின் ;

(xii) 1995 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபையின் தவிசாளர் ;

(xiii) 1981 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, தேசிய நீர்வாழ்வள ஆராய்ச்சி, அபிவிருத்தி முகவர் நிலையச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய நீர்வாழ்வள ஆராய்ச்சி, அபிவிருத்தி முகவர் நிலையத்தின் தவிசாளர் ;

(xiv) 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்விச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய தொழில்பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் தவிசாளர் ; அத்துடன்

(xv) 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்விச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதி ; அத்துடன்

(ஆ) (இச்சட்டத்தில் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படுபவர்களும்), அமைச்சரினால் நியமிக்கப்படுபவர்களுமான பின்வரும் ஆட்கள் :-

(i) கல்விப் பேரவையின் உறுப்பினர்களிடையே யிருந்து அத்தகைய பேரவையினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அதன் உறுப்பினர்கள் இருவர் ;

(ii) எந்திரவியல், அறிவியல் மற்றும் முகாமைத் துவம் என்ற துறைகளிலுள்ள உயர்தொழிற்சார் குழுக்களுள் ஒவ்வொன்றையும் பிரதிநிதித் துவப்படுத்துகின்ற உறுப்பினர் ஒருவர் ;

(iii) கல்விசார், உயர்தொழில்சார் மற்றும் நிருவாகத் துறைகளில் சிறப்புப்பணி ஆற்றியுள்ள ஆட்களிடமிருந்து உறுப்பினர்கள் மூவர்.

(2) சபையின் தவிசாளர் துணைவேந்தராகவிருத்தல் வேண்டுமென்பதுடன், அவர் சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைவகித்தலும் வேண்டும். தவிசாளர் ஏதேனும் கூட்டத்துக்குத் தலைமைவகிப்பதற்கு இயலாதவராகவிருப்பின், சமுகமாயிருக்கும் உறுப்பினர்கள் அத்தகைய கூட்டத்துக்குத் தலைமை வகிக்கவெனத் தம்முள்ளிருந்து உறுப்பினரொருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். பல்கலைக்கழகத்தின் பதிவாளர், சபையின் செயலாளராகப் பணியாற்றுதல் வேண்டும்.

(3) சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவர் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து கணிப்பிடப்பட்ட மூன்றாண்டு காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராகவிருத்தலும் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் அவரது பதவிக்காலம் முடிவுறும் முன்னர் தமது பதவியை வறிதாக்கினால், அவரை அடுத்துறுபவர், அவர் எந்த உறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக் காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(4) சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், அமைச்சருக்கு முகவரியிட்டனுப்படும் அவரது கைப்பட்ட எழுத்தின்மூலம் தமது பதவியிலிருந்து விலகலாம்.

(5) இச்சட்டத்தின் 59 ஆம் பிரிவின்கீழ் பல்கலைக்கழகத்தின் அதிகாரசபையொன்றின் உறுப்பினராகத் தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராகவுள்ள சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் அத்தகைய பதவியிலிருந்து அகற்றப்படுதல் வேண்டும்.

(6) எத்தகையதுமான காரணத்துக்காகவேனும் சபையின் அடுத்தடுத்து நடைபெறும் மூன்று கூட்டங்களுக்கு வருகைதராதிருக்கும் சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், உறுப்பினரென்ற அவரது பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அமைச்சர், (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, விளைகின்ற வெற்றிடத்தை நிரப்புவதற்கு வேறோராளை நியமித்தலும் வேண்டும்.

(7) சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவருக்கு, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சர் தீர்மானிக்கவேண்டியவாறான அத்தகைய படிகள் செலுத்தப்படலாம்.

(8) சபையின் கூட்டமொன்றுக்கான கூட்டநடப்பெண், உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றிலொரு பங்கினராதல் வேண்டும்.

(9) சபையானது அவசியமானபோதெல்லாம் கூடுதல் வேண்டும் ; ஆயின், ஒவ்வோராண்டிலும் ஆகக் குறைந்தது பத்துக் கூட்டங்களையேனும் அது நடாத்துதல் வேண்டும்.

(10) சபையின் தவிசாளர், அவர் அவசியமெனக் கருதுகின்ற போதெல்லாம் அல்லது சபையின் மொத்த உறுப்பாண்மையில் மூன்றிலொரு பங்கினருக்குக் குறையாதோரின் எழுத்திலான கோரிக்கை அவரினாற் பெறப்பட்டதன்மேல் ஒரு வாரத்தினுள் சபையின் விசேட கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும்.

சபையின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்.

**20.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, சபையானது, இச்சட்டத்தினால் பல்கலைக்கழகத்துக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தளிக்கப்பட்ட தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும் புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

(2) சபையானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, பின்வரும் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும் :-

(அ) கல்விப் பேரவையினால் விதந்துரைக்கப்பட்ட கற்கை நெறிகளை அங்கீகரித்தல் ;

(ஆ) அனுமதிப்பு, தராதர அங்கீகார மற்றும் தர உறுதிப் பாட்டுப் பேரவையினால் செய்யப்பட்ட விதப்புரைகளைக் கவனத்துட்கொண்டு, பல்கலைக்கழகத்துக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான தேவைப்பாடுகளைக் காலத்துக்காலம் தீர்மானித்தல் ;

(இ) பல்கலைக்கழகத்தின் ஆதனங்களையும் நிதிகளையும் வைத்திருத்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல்;

(ஈ) பல்கலைக்கழகத்துக்கான மரபுச்சின்னத்தைத் தெரிவு செய்து அதன் வடிவத்தைத் தீர்மானித்தல் ;

(உ) இச்சட்டத்தினதும் தோதான ஏதேனும் சாசனத்தினதும் ஏற்பாடுகளுக்கிணங்கப் பல்கலைக்கழகம் சம்பந்தமான எல்லாக் கருமங்களையும் ஒழுங்குபடுத்துதல் மற்றும் தீர்மானித்தல் ;

(ஊ) பல்கலைக்கழகத்தின் நிதித் தேவைகள் பற்றிக் காலத்துக்குக்காலம் விசாரணை செய்தல் அல்லது நுண்ணாய்வு செய்தல் ;

(எ) ஒரு தடவையில் மூன்றாண்டுகளுக்குக் குறையாத காலப் பகுதிகளுக்கு, பல்கலைக்கழகத்துக்கான கூட்டிணைப்புச் செயல்நுணுக்கத் திட்டங்களையும் நேரொத்த வரவு செலவுத் திட்டங்களையும் காலத்துக்குக்காலம் தயாரித்தல் ;

(ஏ) அரசாங்கத்தின் ஒட்டுமொத்த வேதன மற்றும் சம்பளக் கொள்கைகளினுள், பல்கலைக்கழகத்தின் பணியாட் டொகுதி உறுப்பினர்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஊதியத்தொகையையும், பணியாட்டொகுதி பெறுவதற்கு உரித்துடையதாகவுள்ள ஏனைய நன்மைகளையும் காலத்துக்குக்காலம் தீர்மானித்தல் ;

(ஐ) குறித்த நோக்கங்களுக்காகப் பல்கலைக்கழகத்தின் கையாளுகையில் இடப்பட்ட எவையேனும் நிதிகளை நிருவகித்தல் ;

(ஒ) விருப்பாவணக் கொடைகள், நன்கொடைகள் அல்லது மானியக்கொடைகள் என்ற வகையாக அல்லது வேறு வகையாகப் பல்கலைக்கழகத்துக்கு அளிக்கப்பட்ட ஆதனங்களைப் பெறுதல் மற்றும் ஏற்றுக்கொள்ளுதல்;

(ஓ) பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையையும் ஆண்டுக் கணக்குகளையும் கவனத்துட்கொள்ளுதல் மற்றும் அத்தகைய அறிக்கையையும் கணக்குகளையும், அவசியமென அது கருதக்கூடியவாறான எவையேனும் திருத்தங்களுடன் அமைச்சரிடம் சமர்ப்பித்தல் ;

(ஔ) பல்கலைக்கழகத்தின் வரவுசெலவுத் திட்ட மதிப்பீடு களையும் ஆண்டு நிதி ஒதுக்கீடுகளையும் தயாரித்தல் மற்றும் அவற்றை அமைச்சரிடம் சமர்ப்பித்தல் ;

(க) இச்சட்டத்தின்கீழ் எந்தக் கருமம் தொடர்பில் நியதிச் சட்டங்கள் ஆக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப் படுகின்றதோ அந்த ஏதேனும் கருமத்துக்காக அவ்வாறு தேவைப்படுத்தப்படும்போது நியதிச்சட்டங்களை ஆக்குதல் ;

(ங) இச்சட்டத்தின்கீழ் எந்தக் கருமம் தொடர்பில் துணை விதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்படு கின்றதோ அந்த ஏதேனும் கருமம் தொடர்பில் துணைவிதிகளை ஆக்குதல் ;

(ச) பல்கலைக்கழகத்தின் பணியைக் கொண்டு நடாத்து வதற்குத் தேவையான கட்டிடங்களையும், வளவு களையும், தளபாடங்களையும், சாதனங்களையும், வேறு பொருட்களையும் வழங்குதல் ;

(ஞ) பல்கலைக்கழகத்தின் பணியாட்டொகுதியிலுள்ள ஆட் களின் செயல்நிறைவேற்றுகையை மதிப்பீடு செய்தல் ;

(ட) கல்விப் பேரவையினால் செய்யப்பட்ட எவையேனும் விதப்புரைகளைக் கவனத்துட்கொண்டபின்னர், பல் கலைக்கழகத்தின் பணியாட்டொகுதியிலிருந்தாயினுஞ் சரி வேறெங்கேனுமிருந்தாயினுஞ்சரி, பரீட்சகர்களை நியமித்தல் மற்றும் அத்தகைய பரீட்சகர்களுக்குச் செலுத் தப்படக்கூடிய கட்டணங்களைத் தீர்மானித்தல் ;

(ண) பல்கலைக்கழக மாணவர்களின் பொது நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக, மாணவர்களின் பிரதிநிதி யொருவரை உள்ளடக்கவேண்டிய சேமநலச் சபையை நியமித்தல். அத்தகைய சபையின் அமைப்பு, தத்து வங்கள், கடமைகள் மற்றும் பணிகள் என்பன கட்டளைச் சட்டத்தினால் விதித்துரைக்கப்படுதல் வேண்டும் ;

(த) ஒழுக்காற்றைப் பேணுவதற்காகவும், பல்கலைக்கழகத் தின் பணியாட்டொகுதிக்கும் மாணவர்களுக்கும் வதிவிட வசதிகளை வழங்குவதற்காகவும், அவற்றோடு தொடர்பு பட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்காகவும், மாணவர்களின் பிரதிநிதியொரு வரை உள்ளடக்கவேண்டிய வதிவிட, ஒழுக்காற்றுச் சபையொன்றை நியமித்தல் அத்தகைய சபையின் அமைப்பு, தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் என்பன கட்டளைச் சட்டத்தினால் விதித்துரைக்கப் படுதல் வேண்டும் ;

(ந) பல்கலைக்கழகத்தின் சார்பில் ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளுதல், செயற்படுத்துதல் மற்றும் அவசிய மானமிடத்து இல்லாதாக்குதல் அத்துடன் இலங்கை யில் அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனவு செய்வதில்

அல்லது ஏதேனும் முதலீடுகளில் பல்கலைக்கழகத்தினால் தோற்றுவிக்கப்பட்ட பயன்படுத்தப்படாத ஏதேனும் வருமானமுட்பட, பல்கலைக்கழகத்துக்குச் சொந்தமான எவையேனும் பணங்களை முதலீடு செய்தல் அல்லது உடனடிச் செலவினத்துக்குத் தேவைப்படாத அத்தகைய பணங்களுள் ஏதேனும் பாகத்தை, சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் வங்கியில் நிலையான வைப்புக்களில் இடுதல் ;

(ப) கல்விப் பேரவையுடனான கலந்தாலோசனையின் பின்னர், பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரின், அலுவலர்களின், பட்டதாரிகளின் மற்றும் மாணவர்களின் கல்விசார் உடையை அல்லது அறிகுறி அடையாளங்களை அல்லது இரண்டையும் தீர்மானித்தல் ;

(ம) அனுமதிப்பு, தராதர அங்கீகார மற்றும் தர உறுதிப்பாட்டுப் பேரவையின் கலந்தாலோசனையுடன், சிரேஷ்ட பேராசிரியர் பதவிகள், பேராசிரியர் பதவிகள், இணைப் பேராசிரியர் பதவிகள், சிரேஷ்ட விரிவுரையாளர் பதவிகள், விரிவுரையாளர் பதவிகள் மற்றும் உதவி விரிவுரையாளர் பதவிகள் என்பவற்றை ஏற்படுத்துதல், ஒழித்தல் அல்லது இடைநிறுத்துதல் ;

(ய) அனுமதிப்பு, தராதர அங்கீகார மற்றும் தர உறுதிப்பாட்டுப் பேரவையின் கலந்தாலோசனையுடன், ஏதேனும் கல்விசாராப் பதவியை ஏற்படுத்துதல், ஒழித்தல் அல்லது இடைநிறுத்துதல் ;

(ர) அனுமதிப்பு, தராதர அங்கீகார மற்றும் தர உறுதிப்பாட்டுப் பேரவையின் கலந்தாலோசனையுடன், பந்திகள் (xxi) மற்றும் (xxii) என்பவற்றில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் பதவிக்குத் தேவைப்பட்ட தகைமைகள் பற்றி முடிபுசெய்தல் ;

(ல) பல்கலைக்கழகத்தின் குறிக்கோள்களை எய்தும் நோக்கத்துக்காக, பகிரங்க மற்றும் தனியார் துறையுடன் உடலுழைப்புக்களையும் பங்காண்மைகளையும் தாபித்தல் ;

(வ) கல்விப் பேரவையினால் விதப்புரை செய்யப்படக்கூடிய வாறாக அத்தகைய எண்ணிக்கையினவான பீடங்களை யும் கல்விப் பிரிவுகளையும், கற்கைத்துறைகளையும், கூறுகளையும் அல்லது நிலையங்களையும் தாபித்தல் ;

(அஅ) வருமானம் தோற்றுவிக்கும் செயற்பாடுகளைப் பொறுப் பேற்பதற்கும் அறிவை வர்த்தக மயமாக்குவதற்கும் மட்டுமே, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனி கள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒழுங்கமைப் பொன்றின் முகாமைச் சபையில் சேவையாற்றுவதற்கும் ஆலோசனைச் சேவைகளுக்கு உதவுவதற்கும் பல்கலைக் கழகத்தின் அலுவலர்கள், நிரந்தரப் பணியாட்டொகுதி அல்லது சபையின் எவரேனும் உறுப்பினர்கள் என்போருக்கு அனுமதியளித்தல் ; ஆயின், அத்தகைய ஒழுங்கமைப்பின் இலாபங்கள், பல்கலைக்கழகத்தின் அபிவிருத்திக்காகவும் பணியாட்டொகுதியினதும் மாணவர்களினதும் சேமநலத்துக்காகவும் அதற்கு நன்கொடையளிக்கப்படும் :

இப்பந்தியின் நோக்கங்களுக்காக ''பல்கலைக்கழக சபை'' என்பது ஆளுநர்கள் சபையால் நியமிக்கப்பட்ட நலன்புரிச் சபை மற்றும் வதிவிடம் மற்றும் ஒழுக்கச் சபையை உள்ளடக்கிய ஏதேனும் பல்கலைக்கழக சபை எனப் பொருள்படும் ;

(ஆஆ) பிரதித் துணைவேந்தர் எவரேனுமிருப்பின் அவரின் கடமைகளையும் பணிகளையும் தீர்மானித்தல் மற்றும் குறித்தளித்தல் ;

(இஇ) கல்விப் பேரவையின் விதப்புரையின்மீது ஆதரவூதியங் களையும், புலமைப்பரிசில்களையும், பணவுதவிகளை யும், புத்தகங்களையும் மற்றும் வேறு பரிசில்களையும் வழங்குதல் ; அத்துடன்

(ஈஈ) பல்கலைக்கழகத்தின் எந்த வேறெல்லாத் தத்துவங் களினதும் பிரயோகத்துக்கு இச்சட்டத்தில் அல்லது தோதான ஏதேனும் சாசனத்தில் வேறுவகையாக ஏற்பாடு செய்யப்படவில்லையோ அந்த வேறெல்லாத் தத்துவங்களையும் பிரயோகித்தல்.

(3) கல்விப் பேரவைக்கு ஏதேனும் கல்விசார் கருமத்தின்மீதான அதன் அபிப்பிராயத்தைப் பதிவுசெய்து சபைக்கு அனுப்பி வைப்பதற்கான சந்தர்ப்பமொன்று முதலில் அளிக்கப்பட்டிருந்தாலொழிய, அக்கருமம் தொடர்பான தீர்மானமெதுவும் சபையினால் நிறைவேற்றப்படுதலாகாது.

இப்பிரிவில் "கல்விசார் கருமம்" என்பது, கல்விப் பேரவையின் கட்டுப்பாட்டுக்கும் பொதுப் பணிப்புக்கும் அமைந்ததாகவுள்ள ஏதேனும் கருமம் என்று பொருளாகும்.

*கட்டளைச் சட்டங்களை ஆக்குவதற்குச் சபைக்குள்ள தத்துவங்கள்.*

**21.** (1) சபையானது, இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பயனுறப் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் அதனை இயலச் செய்வதற்கு அவசியமென அது கருதக்கூடியவாறான அத்தகைய எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் கட்டளைச் சட்டங்களை ஆக்கலாம்.

(2) ஒராம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, சபையானது, பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவைதொடர்பிலும் கட்டளைச்சட்டங்களை ஆக்கலாம் :-

(அ) கட்டளைச்சட்டத்தினால் விதித்துரைக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட கருமங்கள் எல்லாம் அல்லது இச்சட்டத்தின் வேறேதேனும் ஏற்பாட்டின்கீழ் எக் கருமங்கள் தொடர்பில் சபையினால் கட்டளைச் சட்டங்கள் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அக்கருமங்கள் எல்லாம் ;

(ஆ) தொடர்புடைய துறைகளில் தொழிற்பயிற்சிக்காக நிறுவனங்களின் தராதரங்களைத் தாபித்தலும் பேணுதலும் ;

(இ) பல்கலைக்கழகத்தின் முழுநேர அலுவலர்களின் சேவை நியதிநிபந்தனைகள் ;

(ஈ) பல்கலைக்கழகப் பணியாட்டொகுதியின் சேவை நியதி நிபந்தனைகள் ;

(உ) பட்டங்கள், திப்புளோமாக்கள் மற்றும் வேறு கல்விசார் திறமைச் சித்திகள் என்பவற்றை வழங்குவதற்காகப் பல்கலைக்கழகத்தின் போதனைத் தரங்களைத் தாபித்தலும் பேணுதலும் ;

(ஊ) வெளிநாட்டுப் பட்டங்களையும் திப்புளோமாக்களையும் மற்றும் வேறு கல்விசார் திறமைச் சித்திகளையும் ஏற்றங்கீகரித்தல் ; அத்துடன்

(எ) மேற்குறிப்பிடப்பட்ட கருமங்களுள் எவற்றுடனும் சம்பந்தப்பட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான வேறேதேனும் கருமம்.

(3) இச்சட்டத்தின்கீழ் சபையினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு கட்டளைச்சட்டமும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அதன்கண் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

அனுமதிப்பு, தராதர அங்கீகார மற்றும் தர உறுதிப்பாட்டுப் பேரவை.

**22.** (1) (இதனகத்துப்பின்னர் "தர உறுதிப்பாட்டுப் பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பல்கலைக்கழகத்தின் அனுமதிப்பு, தராதர அங்கீகார மற்றும் தர உறுதிப்பாட்டுப் பேரவை பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள் :-

(i) பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பீடத்தினதும் பீடாதிபதி ;

(ii) 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்விச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதி ;

(iii) தர உறுதிப்பாட்டுப் பேரவையின் பணிப்பாளர்;

(iv) பல்கலைக்கழகத்தின் பதிவாளர் ;

(v) தொழினுட்பவியற் கல்லூரிகள் செயற்பாடுகளை ஒழுங்கு படுத்துகின்ற பொறுப்பு எக்குழுவுக்குப் பொறுப்பிக்கப்பட்டுள்ளதோ அக்குழுவின் தலைவர் ; அத்துடன்

(ஆ) (இப்பிரிவில் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) துணைவேந்தரினால் நியமிக் கப்பட்ட பின்வரும் ஆட்கள் :-

(i) ஆகக்கூடியது மூன்று உறுப்பினர்கள் வரை கடற்றொழில் மற்றும் சமுத்திர அறிவியல்கள், கடலோரத் தொழினுட்பவியல்கள் மற்றும் இணைந்த துறைகளில் உயர்தொழிற்சார் குழுக் கள் ஒவ்வொன்றிலுமிருந்து ஒரு பிரதிநிதி ;

(ii) பீடங்களின் பீடாதிபதிகளிடையேயிருந்து தேர்ந் தெடுக்கப்பட்ட ஆகக்கூடியது மூன்று உறுப்பினர் கள் வரை கடற்றொழில் மற்றும் சமுத்திர அறிவியல்கள், கடலோரத் தொழினுட்பவியல் கள் மற்றும் இணைந்த துறைகளில் ஏனைய பல்கலைக்கழகங்கள் ஒவ்வொன்றிலுமிருந்து ஒரு பல்கலைக்கழகக் கல்விமான் ;

(iii) கல்விப் பேரவையினால் அதன் உறுப்பினர் களிடையேயிருந்து பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அப்பேரவையிலிருந்தான மூன்று பிரதிநிதிகள்; அத்துடன்

(iv) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தர உறுதிப்பாடு மற்றும் தராதர அங்கீகாரப் பேரவையின் பணிப்பாளர் மற்றும் 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்விச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவிலிருந்து தேசியத் தொழிற்றகைமைகளுக்கும் தராதர அங்கீகாரத் துக்கும் பொறுப்பாகவுள்ள இரண்டு பணிப் பாளர்கள்.

(2) தர உறுதிப்பாட்டுப் பேரவையின் தவிசாளர், ஒவ்வொரு பீடத்தினதும் பீடாதிபதிகளிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும் ; அவரே அத்தகைய பேரவையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டும். தவிசாளர் ஏதேனும் கூட்டத்துக்குத் தலைமைதாங்க இயலாதவராகவிருப்பின், சமுகமாகவிருக்கும் உறுப்பினர்கள், அத்தகைய கூட்டத்துக்குத் தலைமைதாங்கவெனச் சமுகமாகவிருக்கும் உறுப்பினரொருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(3) பல்கலைக்கழகத்தின் பதிவாளர், தர உறுதிப்பாட்டுப் பேரவையின் செயலாளராகவிருத்தல் வேண்டும்.

(4) தர உறுதிப்பாட்டுப் பேரவையின் கூட்டமொன்றுக்கான கூட்டநடப்பெண் அதன் மொத்த உறுப்பாண்மையின் ஓரரைவாசியாதல் வேண்டுமென்பதுடன், தர உறுதிப்பாட்டுப் பேரவை அவசியமானபோதெல்லாம் கூடுதலும் வேண்டும் ; ஆயின், ஒவ்வோராண்டிலும் ஆகக் குறைந்தது ஒரு தடவையேனும் அது கூடுதல் வேண்டும்.

(5) தர உறுதிப்பாட்டுப் பேரவையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவர் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து கணிப்பிடப்பட்ட நான்காண்டுகளைக் கொண்டவொரு காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும் :

ஆயின், நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் அவரது பதவிக்காலம் முடிவுறு முன்னர் தமது பதவியை வறிதாக்கினால், அவரை அடுத்துறுபவர், அவர் எந்த உறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு மட்டுமே பதவிவகித்தல் வேண்டும்.

(6) தர உறுதிப்பாட்டுப் பேரவையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், துணைவேந்தருக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட அவரது கைப்பட எழுத்தின்மூலம் தமது பதவியிலிருந்து விலகலாம்.

(7) இச்சட்டத்தின் 59 ஆம் பிரிவின்கீழ் பல்கலைக்கழகத்தின் அதிகாரசபையொன்றின் உறுப்பினராகத் தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராகவுள்ள தர உறுதிப்பாட்டுப் பேரவையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் அத்தகைய பதவியிலிருந்து அகற்றப்படுதல் வேண்டும்.

(8) தர உறுதிப்பாட்டுப் பேரவையின் அடுத்தடுத்து நடைபெறும் மூன்று கூட்டங்களுக்கு எத்தகையதுமான எக்காரணத்துக்காக வேனும் வருகைதராதிருக்கும் தர உறுதிப்பாட்டுப் பேரவையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், உறுப்பினரென்ற தமது பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டுமென் பதுடன், துணைவேந்தர், (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, விளைகின்ற வெற்றிடத்தை நிரப்புவதற்கு வேறோராளை நியமித்தலும் வேண்டும்.

(9) தர உறுதிப்பாட்டுப் பேரவையின் நியமிக்கப்பட்ட உறுப் பினரொருவருக்கு, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாக வுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சர் தீர்மானிக்கவேண்டியவாறான அத்தகைய படி செலுத்தப்பட லாம்.

*தர உறுதிப்பாட்டுப் பேரவையின் தத்துவங்கள்.*

**23.** தர உறுதிப்பாட்டுப் பேரவை, பின்வருவனபற்றிய தோதான எவையேனும் அறிக்கைகளைக் கவனத்துட்கொண்ட தன்மேல், சபைக்கு விதந்துரைப்பதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும் :-

(அ) பல்கலைக்கழகத்திலான கற்கைநெறிகளுக்கான அனுமதிப்புக் கட்டளைக்கற்கள் :

ஆயின், அனுமதிக்கான பரீட்சார்த்திகளின் ஏதேனும் வகுப்பாக்கத்திற்கான ஏதேனும் திறமைச் சோதனை பல்கலைக்கழகத்துடனான கலந்தாலோசனையுடன் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுதல் வேண்டும் ;

(ஆ) ஒவ்வொரு கற்கைநெறிக்கும் அனுமதிக்கப்படவேண்டிய மாணவர்களின் எண்ணிக்கை ;

(இ) பல்கலைக்கழகத்திலான கற்கைநெறிகளுக்கான அனுமதிப்பைப் பெறுவதற்கெனத் திருப்தி செய்யப்படுவதற்குத் தேவைப்படுகின்றவையும், ஏதேனும் பகிரங்க அல்லது தனியார் நிறுவனத்தினால் வழங்கப்பட்டவையும் அல்லது அளிக்கப்பட்டவையும், தேசியத் தொழிற்றகைமைகள் மற்றும் வேறேவையேனும் தொழிற்றகைமைகள் என்பவற்றுளிருந்தவையுமான தகைமைகள் ;

(ஈ) பல்கலைக்கழகத்தின் பணியாட்டொகுதிக்கான ஆட்சேர்ப்பு மற்றும் மேம்படுத்துகைக் கட்டளைக்கற்கள் ;

(உ) கற்கைநெறிகளின் கல்விசார் நிலைமையைப் பேணுவதற்கு அல்லது தரமுயர்த்துவதற்கு இயைபான ஏதேனும் கருமம் ;

(ஊ) சிரேஷ்ட பேராசிரியர்பதவிகள், பேராசிரியர்பதவிகள், இணைப் பேராசிரியர்பதவிகள், சிரேஷ்ட விரிவுரையாளர் பதவிகள், விரிவுரையாளர் பதவிகள் மற்றும் உதவி விரிவுரையாளர்பதவிகள் என்பவற்றை ஏற்படுத்துதல், ஒழித்தல் அல்லது இடைநிறுத்துதல் ;

(எ) கல்விப் பேரவையினதும் தோதான பங்குதாரர்களுடனான கலந்தாலோசனையுடன், பல்கலைக்கழகத்திலான கற்கைநெறிகளின் தராதர அங்கீகாரத் தேவைப்பாடுகளை வகுத்தமைத்தல் ;

(ஏ) பல்கலைக்கழகத்தின் எல்லா ஆசிரியர்களினதும் கல்விசாராப் பணியாட்டொகுதியினதும் தகைமைத் தேவைப்பாடுகள் ;

(ஐ) பல்கலைக்கழகத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்கு, ஏனைய தேசிய மற்றும் சர்வதேச உயர் கல்வி நிறுவனங்களுடனும் உயர்தொழிற்சார் குழுக்களுடனும் தாபிக்கப்படவேண்டிய உடனுழைப்புக்கள் ;

(ஒ) அத்தகைய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படக்கூடியவையும், அதன் தத்துவங்கள் பற்றியவையுமான எவையேனும் கருமங்கள்மீது கலந்தாராய்வதற்கும் அதற்கு அறிக்கையிடுவதற்கும் அவசியமென அது கருதக்கூடியவாறாக, அதன் சொந்த உறுப்பினர்களையும் அதன் உறுப்பாண்மைக்கு வெளியேயுள்ள வேறெவரேனும் உயர்தொழிலர்களையும் கொண்டுள்ள அத்தகைய எண்ணிக்கையினவான குழுக்களை நியமித்தல் ; அத்துடன்

(ஓ) அதன் விதப்புரைக்காகச் சபையினால் அதற்கு ஆற்றுப்படுத்தப்படக்கூடிய வேறேதேனும் கருமம்.

கல்விப் பேரவை.

**24.** (1) கல்விப் பேரவை பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள் :-

(i) துணைவேந்தர் ;

(ii) பிரதித் துணைவேந்தர் எவரேனுமிருப்பின் அவர் ;

(iii) ஒவ்வொரு பீடத்தினதும் பீடாதிபதி ;

(iv) ஒவ்வொரு வளாகத்தினதும் பல்கலைக்கழக முகவர் மற்றும் பல்கலைக்கழகத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஒவ்வொரு நிறுவகத்தினதும் பணிப்பாளர் ;

(v) பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு சிரேஷ்ட பேராசிரியரும் பேராசிரியரும் ;

(vi) பல்கலைக்கழகத்தின் பதிவாளர் ;

(vii) பரீட்சைகளுக்குப் பொறுப்பாகவிருப்பதற்குப் பெயர் குறித்துநியமிக்கப்பட்ட அலுவலர் ;

(viii) ஊடகத்துறை மற்றும் தகவற்சேவைகள் பணிப்பாளர் ;

(ix) அனுமதிப்பு, தராதர அங்கீகார மற்றும் தர உறுதிப்பாட்டுப் பேரவையின் பணிப்பாளர் ;

(x) பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு கற்கையின் கல்விசார்துறையின் தலைவர் ;

(ஆ) பின்வரும் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் :-

(i) ஒவ்வொரு பீடத்தினதும் நிரந்தரமான ஆசிரியர்களினால் தமது எண்ணிக்கையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும், ஒவ்வொரு பீடத்திலிருந்து ஏழு பிரதிநிதிகளை விஞ்சாத அத்தகைய எண்ணிக்கையினருமான இணைப் பேராசிரியர்களும் சிரேஷ்ட விரிவுரையாளர்களும் ;

(ii) அத்தகைய பீடங்களுள் ஒவ்வொன்றையும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்குப் பீடச் சபையினால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும், பீடங்களின் மொத்த எண்ணிக்கைக்குச் சமமாகவுள்ள அத்தகைய எண்ணிக்கையினருமான விரிவுரையாளர்கள் ; அத்துடன்

(iii) அந்தந்தப் பீடச் சபைகளினால் விதந்துரைக்கப்பட்டவாறு, கல்வி, உயர்தொழில், வர்த்தக, தொழில், அறிவியல் அல்லது நிருவாகத் துறைகளில் சிறப்புப்பணி ஆற்றியுள்ள ஆட்களிலிருந்து சபையினால் நியமிக்கப்பட்டவர்களும், பீடங்களின் மொத்த எண்ணிக்கைக்குச் சமமாகவுள்ள அத்தகைய எண்ணிக்கையினருமான உறுப்பினர்கள்.

(2) ஒராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் தேர்ந் தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட ஒவ்வோர் உறுப்பினரும், விடயத்துக்கேற்ப, அவரது தேர்தல் அல்லது நியமனத் தேதி யிலிருந்து கணிப்பிடப்பட்ட இரண்டு ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(3) கல்விப் பேரவையின் கூட்டமொன்றுக்கான கூட்டநடப் பெண் அதன் மொத்த உறுப்பாண்மையில் மூன்றிலொரு பங்கினராதல் வேண்டும்.

(4) கல்விப் பேரவை, அவசியமானபோதெல்லாம் கூடுதல் வேண்டும் ; ஆயின், ஒவ்வோராண்டிலும் பத்துத் தடவைகளுக்குக் குறையாமல் அது கூடுதல் வேண்டும்.

(5) கல்விப் பேரவையின் தவிசாளர், துணைவேந்தராக விருத்தல் வேண்டும் ; அவரே கல்விப் பேரவையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டும். தவிசாளர் ஏதேனும் கூட்டத்துக்குத் தலைமைதாங்க இயலாதவராக விருப்பின், பிரதித் துணைவேந்தர் எவரேனுமிருப்பின் அவர் அத்தகைய கூட்டத்துக்குத் தலைமைதாங்குதல் வேண்டும். பிரதித் துணைவேந்தர் இல்லாதவிடத்து, சமுகமாகவிருக்கும் உறுப் பினர்கள், அத்தகைய கூட்டத்தில் தலைமைதாங்கவெனச் சமுகமாகவிருப்போருளிலிருந்து உறுப்பினரொருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

கல்விப் பேரவையின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்.

**25.** (1) கல்விப்பேரவை, பல்கலைக்கழகத்தின் கல்வி அதிகார சபையாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தினதும் தோதான ஏதேனும் சாசனத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, பல்கலைக்கழகத்தின் போதனை, கல்வி, ஆராய்ச்சி மற்றும் பரீட்சைகள் என்பவற்றின் தரத்தினது கட்டுப்பாட்டையும் பொதுப் பணிப்பையும் கொண்டிருத்தலும் வேண்டும்.

(2) கல்விப் பேரவை, (1) ஆம் உட்பிரிவினால், அதற்கு அளிக் கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, பின்வரும் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித் தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்:-

(i) கற்கை நெறிகளையும் பரீட்சைகளையும் ஒழுங்கு படுத்தும் முறைகள்பற்றி ஏதேனும் பீடத்தினால் அல்லது எவையேனும் பீடங்களினால் சமர்ப்பிக்கப் பட்ட அறிக்கைகளைக் கவனத்திற் கொண்டதன்மேல் சபைக்கு மதியுரையளித்தலும், அத்தகைய கற்கை நெறிகள் தொடர்பாகச் சபைக்கு விதப்புரைகளைச் செய்தலும் ;

(ii) ஏதேனும் பீடத்தினால் அல்லது எவையேனும் பீடங் களினால் சமர்ப்பிக்கப்பட்ட எவையேனும் அறிக்கை களைக் கவனத்திற்கொண்டபின்னர், பரீட்சகர்களாக நியமிக்கப்படுவதற்குப் பொருத்தமான ஆட்களின் பெயர்களைச் சபைக்கு விதந்துரைத்தல் ;

(iii) பல்கலைக்கழகத்திலுள்ள சிரேஷ்ட பேராசிரியர் பதவி கள், பேராசிரியர் பதவிகள், இணைப் பேராசிரியர் பதவிகள், சிரேஷ்ட விரிவுரையாளர் பதவிகள், விரிவுரையாளர் பதவிகள் மற்றும் உதவி விரிவுரை யாளர் பதவிகள் என்பவற்றை ஏற்படுத்துதல், ஒழித்தல் அல்லது இடைநிறுத்துதல் தொடர்பான எவையேனும் முன்மொழிவுகளின்மீது பீடச் சபையொன்றினால் விடுக்கப்பட்ட ஏதேனும் வேண்டுகோளை மதிப்பீடு செய்தலும், அதுபற்றித் தர உறுதிப்பாட்டுப் பேரவைக்கு அதன் விதப்புரைகளைச் செய்தலும் ;

(iv) ஏதேனும் பீடத்தினால் அல்லது எவையேனும் பீடங் களினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளைக் கவனத் துட்கொண்டபின்னர், பின்வருவனவற்றைச் சபைக்கு விதந்துரைத்தல் :-

(அ) ஏலவேயுள்ள பீடங்களை மீள ஒழுங்குபடுத்து வதற்கான திட்டங்கள் ; அத்துடன்

(ஆ) அந்தந்தப் பீடங்களுக்குக் கற்கைப் பாடங்களைக் குறித்தளிப்பதற்கான திட்டங்கள் ;

(v) ஆதரவூதியங்கள், புலமைப் பரிசில்கள், சிறப்புப் பரிசில்கள், பணவுதவிகள், பதக்கங்கள் மற்றும் வேறு பரிசில்கள் என்பவற்றை வழங்குவதற்காக விதிக்கப்பட வேண்டிய போட்டிமுறையும் நிபந்தனைகளும் தொடர்பான கருமங்கள்மீது சபைக்கு விதப்புரைகளைச் செய்தல் ;

(vi) ஆதரவூதியங்கள், புலமைப் பரிசில்கள், சிறப்புப் பரிசில்கள், பணவுதவிகள், பதக்கங்கள் மற்றும் வேறு பரிசில்கள் என்பவற்றை வழங்குதல் தொடர்பான கருமங்கள்மீது சபைக்கு விதப்புரைகளைச் செய்தல் ;

(vii) அவசியமென அது கருதக்கூடியவாறாகக் கல்விப் பேரவையின் உறுப்பினர்களிலிருந்து அத்தகைய எண்ணிக்கையினவான நிலையியற் குழுக்களை அல்லது நிமித்தக் குழுக்களை அல்லது சபைகளை மற்றும் குறிப்பாகப் பின்வருவனவற்றை நியமித்தல் :-

(அ) ஊடகத்துறை மற்றும் தகவற் சேவைகள் குழு ;

(ஆ) ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டுக் குழு ;

(இ) கைத்தொழில் - பல்கலைக்கழகப் பங்காண்மைக் குழு ;

(ஈ) பாடவிதான அபிவிருத்தி மற்றும் மதிப்பீட்டுக் குழு ;

(உ) லீவு மற்றும் அளிப்புக்கள் குழு ; அத்துடன்

(ஊ) பிராந்தியக் குழு.

(viii) (vii) ஆம் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட குழுக்களினதும் சபைகளினதும் உசாவெல்லையைக் குறித்துரைத்தலும், திரிபுடனோ திரிபின்றியோ அத்தகைய ஏதேனும் குழுவினால் அல்லது சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளை ஒன்றில் அங்கீகரித்தலும் அல்லது அத்தகைய அறிக்கைகளை நிராகரித்தலும் ;

(ix) எவையேனும் கற்கைநெறிகளுக்கு மாணவர்களை அனுமதித்தல் தொடர்பாகப் பீடச்சபையொன்றினால் செய்யப்பட்ட எவையேனும் முன்மொழிவுகளை, அவைபற்றிய அதன் அவதானிப்புகளுடன் சேர்த்து, தர உறுதிப்பாட்டுப் பேரவைக்கு ஆற்றுப்படுத்துதல் ;

(x) அதன் கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் விசாலிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கு அவசியமென அது கருதக்கூடியவாறான அத்தகைய பீடங்களைத் தாபித்தல் தொடர்பாகக் காலத்துக்குக்காலம் சபைக்கு விதந்துரைத்தல்.

**26.** (1) பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பீடத்தினதும் பீடச்சபை பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :- *பீடச் சபை.*

(அ) பீடத்தின் பீடாதிபதி ;

(ஆ) ஒவ்வொரு கல்விசார் கற்கைத்துறையினதும் தலைவர்;

(இ) பீடத்தின் எல்லாச் சிரேஷ்ட பேராசிரியர்களும், பேராசிரியர்களும், இணைப் பேராசிரியர்களும், சிரேஷ்ட விரிவுரையாளர்களும் மற்றும் விரிவுரையாளர்களும் ;

(ஈ) தர உறுதிப்பாட்டுப் பேரவையின் பணிப்பாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(உ) ஊடகத்துறை மற்றும் தகவற்சேவைகள் பணிப்பாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(ஊ) நிரந்தரப் பணியாட்டொகுதியிலுள்ளோரிடையே அவர்களினால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும், பந்தி (இ) வில் குறிப்பீடு செய்யப்பட்டோர் தவிர்ந்தவர்களும், பீடத்தில் போதனை புகட்டுகின்ற நிரந்தரப் பணியாட்டொகுதியைச் சேர்ந்தவர்களுமான இரு உறுப்பினர்கள் ; அத்துடன்

(எ) பீடத்தின் மாணவர்களினால் தமது எண்ணிக்கையினருளிந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இரு மாணவர்கள் :

ஆயின், எவ்வாறாயினும், இப்பந்தியின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், இச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின்கீழ் பீடாதிபதியைத் தேர்ந்தெடுத்தல் தொடர்பானதும், பரீட்சைகள் மற்றும் சம்பந்தப்பட்ட கருமங்கள் தொடர்பானதுமான பீடச்சபையின் ஏதேனும் கூட்டத்தினது நடவடிக்கைகளிலிருந்து தவிர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஏதேனும் கூட்டம், அத்தகைய தவிர்ப்பு எவ்வாறிருப்பினும், உரியமுறையில் நடாத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும் ;

(ஏ) அந்தந்தப் பீடத்திற்கு இயைபான கற்கைத்துறைகளில் மேன்மைபெற்றுள்ள ஆட்களிலிருந்து பீடத்தினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர்களும், பல்கலைக்கழகத்தின் பணியாட்டொகுதி உறுப்பினர்களாகவிராதவர்களுமான ஐந்து ஆட்கள்.

(2) ஒராம் உட்பிரிவின் (எ) என்னும் பந்தியின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், ஓராண்டு காலப்பகுதிக்கு உறுப்பினராகப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், மற்றைய எல்லாத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும், அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட தேதியிலிருந்து கணிப்பிடப்பட்ட மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்குப் பதவி வகித்தலும் வேண்டும்.

(3) பீடச்சபையின் தவிசாளர், பீடத்தின் பீடாதிபதியாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், அவரே பீடச்சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைவகித்தலும் வேண்டும். பீடத்தின் பீடாதிபதி அத்தகைய ஏதேனும் கூட்டத்திற்குத் தலைமைதாங்க இயலாதவராகவிருக்குமிடத்து, சமுகமாகவிருக்கும் உறுப்பினர்கள், அத்தகைய கூட்டத்திற்குத் தலைமை தாங்கவென, (1) ஆம் உட்பிரிவின் (எ) என்னும் பந்தியின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரொருவர் தவிர்ந்தவரும், சமுகமாகவிருக்கின்றவருமான உறுப்பினரொருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(*4*) பீடச்சபையின் கூட்டங்களுக்கான கூட்டநடப்பெண் அதன் மொத்த உறுப்பாண்மையில் மூன்றிலொரு பங்கினராதல் வேண்டுமென்பதுடன், அது அவசியமானபோதெல்லாம் கூடுதலும் வேண்டும் ; ஆயின், ஒவ்வோராண்டிலும் பத்துத் தடவைகளுக்குக் குறையாமல் அது கூடுதல் வேண்டும்.

*பீடச்சபையின் தத்துவங்களும் கடமைகளும் பணிகளும்.*

**27**. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, பீடச்சபையொன்று பின்வரும் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும் :-

(அ) கல்விப் பேரவையினால் அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமத்தைக் கவனத்திற்கொண்டு அதன்மீது அறிக்கையிடுதல் ;

(ஆ) கல்விப் பேரவையின் கட்டுப்பாட்டுக்கமைய, பேராழியியல், கடல்சார் எந்திரவியல், கடற்றொழில் மற்றும் சமுத்திர அறிவியலும் முகாமைத்துவமும், தொழினுட்ப மற்றும் தொழிற்கல்வி அத்துடன் பயிற்சி ஆகியவற்றின் பல்வேறு கிளைகளில் கற்பித்தல், பரீட்சைகள் மற்றும் ஆராய்ச்சி என்பவற்றுடன் சம்பந் தப்பட்ட கருமங்களை ஒழுங்குபடுத்துதல் ;

(இ) பீடத்திலான கற்கைநெறிகளுடனும் பரீட்சைகளுடனும் சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்கள் மீதும் கல்விப் பேரவைக்கு விதப்புரைகளையும் அறிக்கைகளையும் முன்வைத்தல் ;

(ஈ) ஏதேனும் விசேட பாடத்தை அல்லது பாடங்களைக் கவனத்திற்கொண்டு அதுபற்றி அல்லது அவைபற்றி அறிக்கையிடும் நோக்கத்துக்காக, பீடத்தின் உறுப்பினர்களல்லாத ஆட்களை உள்ளடக்கக்கூடிய குழுக்களை நியமித்தல் ; அத்துடன்

(உ) பரீட்சகர்களாக நியமிக்கப்படுவதற்குப் பொருத்தமான ஆட்களின் பெயர்களைக் கல்விப் பேரவைக்கு விதந்துரைத்தல்.

## பாகம் VI

### வளாகங்கள்

*வளாகங்களைத் தாபித்தல்.*

**28.** சபையானது (இதனகத்துப்பின்னர் ''வளாகக் கட்டளை'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) -

(அ) பல்கலைக்கழகத்தின் வளாகத்தினைத் தாபித்தல் ;

(ஆ) அத்தகைய வளாகத்துக்கு பெயரையும் மகுடத்தையும் குறித்தளித்தல் ;

(இ) அத்தகைய வளாகத்தின் இடத்தின் அல்லது இடத்தைக் குறித்தளித்தல் ;

(ஈ) அத்தகைய வளாகத்துக்கு பீடத்தை அல்லது பீடங்களை குறித்தல் ; அத்துடன்

(உ) அத்தகைய பீடத்தை அல்லது பீடங்களை உள்ளடக்கிய கற்கையின் திணைக்களங்களைக் குறித்துரைத்தல்.

*வளாகத்தின் பல்கலைக்கழக முகவர்.*

**29.** (1) ஒரு வளாகத்தின் பல்கலைக்கழக முகவர் துணை வேந்தரினால் நியமிக்கப்படுதல் வேண்டும். அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து கணக்கிடப்பட்ட மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, மேற்கூறப்பட்ட காலப்பகுதியை உடனடுத்துவரும் மேலும் மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்கு மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையராதலும் வேண்டும்.

(2) பல்கலைக்கழக முகவர் லீவு, சுகவீனம், இலங்கையில் இல்லாமை என்ற காரணமாக அல்லது வேறு காரணத்துக்காக அவரது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்கு இயலாமை ஏற்பட்டதிலிருந்து ஏழு நாட்களினுள், பதவிக்கு தற்காலிகமாக இயலாதவராதவிருப்பின், துணைவேந்தர், அத்தகைய கடமைகளைக் கொண்டுநடாத்துவதற்காகத் தகுதியானவையென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய ஒழுங்கேற்பாடுகளைச் செய்யலாம். அத்தகைய ஒழுங்கேற்பாடுகள் செய்யப்படும்வரை, பதிவாளர், பல்கலைக்கழக முகவர் பதவிக்குரிய வழக்கமுறையான கடமைகளைக் கொண்டுநடாத்துதல் வேண்டும்.

(3) பல்கலைக்கழக முகவர், வளாகத்தின் முழுநேர அலுவலரொருவராகவிருத்தல் வேண்டுமென்பதுடன், வளாகத்தின் கல்விசார் மற்றும் நிருவாகத் தலைவராகவிருத்தலும் வேண்டும்.

(4) பல்கலைக்கழக முகவர் வளாகத்தின் தவிசாளராகவிருத்தல் வேண்டும்.

வளாகச் சபை.

**30.** (1) (இதனகத்துப்பின்னர் ''வளாகச் சபை'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) சபையொன்றை வளாகமானது கொண்டிருத்தல் வேண்டும் ; அதன் அமைப்பு, கட்டளைச் சட்டத்தின்மூலம் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

(2) வளாகச் சபை பின்வருவனவற்றுக்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும் :-

(அ) வளாகத்தின் உள்ளக நிருவாகத்துக்கும் ;

(ஆ) வளாகத்தைச் சேர்ந்த ஆட்களின் பொதுவான நல்வாழ்வுக்காகவும் அவர்களுக்கு வாழ்வசதிகளை வழங்குவதற்காகவும் ஒழுங்கேற்பாடுகளைச் செய்வதற்கும் ; அத்துடன்

(இ) நியதிச்சட்டத்தினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான வேறேதேனும் கடமையைப் புரிவதற்கும்.

(3) வளாகச் சபையானது, பல்கலைக்கழகத்தின் ஆளுநர் சபையின் அங்கீகாரத்துடன், வளாகத்தின், உள்ளக நிருவாகத்துடன் தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான அல்லது அதனோடு சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் விதிகளை ஆக்கலாம்.

## பாகம் VII

### பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா

பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவை நடாத்துதல்.

**31.** (1) பல்கலைக்கழகமானது, பட்டங்களை அளிக்கும் நோக்கத்துக்காக, வேந்தரினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியில் அல்லது தேதிகளில் ஒவ்வோராண்டிலும் ஒருதடவை பட்டமளிப்பு விழாவொன்றை நடாத்துதல் வேண்டும்.

ஆயின், பல்கலைக்கழகமானது, துணைவேந்தர் தீர்மானிக்கக் கூடியவாறாக, விசேட பட்டமளிப்பு விழாவொன்றை வேறெந்த நேரத்திலும் நடாத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், பட்டமளிப்பு விழாவொன்றை நடாத்தாமல் முதலாவது பட்டங்கள் அளிக்கப்படலாம்.

(3) ஒரு பட்டமளிப்பு விழாவை நடாத்துவதற்கான நடவடிக்கைமுறை துணைவிதிகளினால் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

(4) சனாதிபதி சமுகமாகவிருக்கும்போது பட்டமளிப்பு விழாவுக்குத் தலைமைதாங்குதல் வேண்டும். சனாதிபதி இல்லாதிருப்பின், வேந்தர் அத்தகைய பட்டமளிப்பு விழாவுக்குத் தலைமைதாங்குதல் வேண்டுமென்பதுடன் சனாதிபதி மற்றும் வேந்தர் ஆகிய இருவரும் இல்லாதிருப்பின் துணைவேந்தர் அத்தகைய பட்டமளிப்பு விழாவுக்குத் தலைமைதாங்குதலும் வேண்டும்.

## பாகம் VIII

### பல்கலைக்கழகத்தின் பணியாட்டொகுதி

*சபையானது பல்கலைக் கழகத்தின் பணியாட் டொகுதியை நியமித்தல்.*

**32.** பல்கலைக்கழகத்தின் பணியாட்டொகுதிக்கான நியமனம் ஒவ்வொன்றும், ஆட்சேர்ப்பு மற்றும் நடவடிக்கைமுறை பற்றிய அத்தகைய திட்டங்களுக்காகக் கட்டளைச் சட்டத்தினால் விதித் துரைக்கப்பட்டவாறு, அவற்றுக்கிணங்கச் சபையினால் செய்யப் படுதல் வேண்டும்.

*பல்கலைக் கழகத்தின் பணியாட் டொகுதியினது தகைமைகளைத் தீர்மானித்தல்.*

**33.** பல்கலைக்கழகத்தின் எல்லா ஆசிரியர்களினதும் தகைமைகள், தர உறுதிப்பாட்டுப் பேரவையின் கலந்தாலோ சனையுடன் சபையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டுமென் பதுடன், எல்லாக் கல்விசாராப் பணியாட்டொகுதியினதும் தகைமைகள், சபை அவசியமெனக் கருதுகின்றவிடத்து தர உறுதிப்பாட்டுப் பேரவையின் கலந்தாலோசனையுடன் அதனால் தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்.

*பல்கலைக் கழகத்தின் பணியாட் டொகுதியிலுள்ள பதவிகளை ஏற்படுத்துதலும், ஒழித்தலும், இடை நிறுத்துதலும்.*

**34.** (1) ஒவ்வொரு பீடத்துக்கும் தேவைப்பட்ட ஆசிரியர்களின் பதவிகளை ஏற்படுத்துதல், ஒழித்தல் மற்றும் இடைநிறுத்துதல் என்பன தொடர்பாகக் கல்விப் பேரவைக்கு எழுத்திலான முன் மொழிவுகளைச் செய்தல் ஒவ்வொரு பீடச்சபையின் கடமையாதல் வேண்டும். கல்விப் பேரவை அத்தகைய முன்மொழிவுகளைக் கவனத்திற்கொள்ளுதலும் மதிப்பீடுசெய்தலும் வேண்டுமென் பதுடன், அதன்பின்னர் பீடச் சபைக்கு அதன் விதப்புரைகளைச் செய்தலும் வேண்டும்.

(2) பல்கலைக்கழகத்திலுள்ள எல்லாக் கல்விசாராப் பதவிகளையும் ஏற்படுத்துதல், ஒழித்தல் மற்றும் இடைநிறுத்துதல் என்பன தொடர்பாகச் சபைக்கு விதப்புரைகளைச் செய்தல், பல்கலைக்கழகப் பதிவாளரின் கடமையாதல் வேண்டும்.

(3) பல்கலைக்கழகத்தில் ஆசிரியரொருவரின் ஏதேனும் பதவியை அல்லது எதேனும் கல்விசாராப் பதவியை ஏற்படுத்து வதற்கு, ஒழிப்பதற்கு அல்லது இடைநிறுத்துவதற்குமுன்னர், பீடச் சபையானது தோதானதென அது கருதுகின்றவிடத்து, அது பற்றித் தர உறுதிப்பாட்டுப் பேரவையின் மதியுரையைப் பெறலாம்.

*தகுதிகாண் நிலைக் காலப்பகுதிகளும் உறுதிப்படுத்து கையும்.*

**35.** (1) ஆசிரியரொருவரின் பதவிக்கான ஒவ்வொரு நியமன மும், முதற்றடவையில், மூன்றாண்டுகளைக்கொண்ட தகுதி காண்நிலைக் காலப்பகுதிக்கானதாகவிருத்தல் வேண்டும். இக்காலப்பகுதி, ஒருதடவையில் ஓராண்டு காலப்பகுதிக்குச் சபையினால் நீடிக்கப்படலாம் ; ஆயின், அந்நீடிப்பு, கூட்டு மொத்தத்தில் மூன்றாண்டுகளைக் கொண்டவொரு காலப் பகுதியை விஞ்சுதலாகாது. தகுதிகாண்நிலைக் காலப்பகுதியின் முடிவில், நியமனமானது, கட்டளைச்சட்டத்தினால் விதித் துரைக்கப்பட்டவாறான ஆட்சேர்ப்புகளின் தோதான திட்டங் களில் ஏற்பாடுசெய்யப்பட்ட உறுதிப்படுத்துகை பற்றிய தேவைப் பாடுகளுக்கு அல்லது நிபந்தனைகளுக்கு இணங்க உறுதிப் படுத்தப்படலாம்.

(2) கல்விசாராப் பதவியொன்றுக்கான நியமனம் ஒவ்வொன் றும், முதற்றடவையில், மூன்றாண்டுகளைக் கொண்டவொரு தகுதிகாண்நிலைக் காலப்பகுதிக்கானதாகவிருத்தல் வேண்டு மென்பதுடன், அத்தகைய நியமனம், அதன்பின்னர், கட்டளைச் சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்டவாறான உறுதிப்படுத்துகைக் கட்டளைகற்களுக்கிணங்க உறுதிப்படுத்தவும்படலாம்.

கல்விசாரப் பதவியொன்றை வகிக்கின்ற ஆசிரியர்களும் ஆட்களும் இளைப்பாறுதல்.

**36.** (1) ஆசிரியர் பதவியொன்றை வகிக்கின்ற ஆளொருவர், அவர் தமது பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருப்பின், அவர் அறுபது வயதைப் பூர்த்திசெய்யும்வரை அத்தகைய பதவியை வகித்தல் வேண்டும். கல்வியாண்டு முடியுமுன்னர் அறுபதாவது வயது முடிவுற்றால், அவர் அத்தகைய கல்வியாண்டின் முடிவுவரை தொடர்ந்திருக்கலாமென்பதுடன், அதன்பின்னர் சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளாரெனக் கருதப்படுதலும் வேண்டும் :

ஆயின், அத்தகைய பதவியை வகிப்பவர், சபையினாலான விசாரணையொன்று முடிவுறும்வரை எந்நேரத்திலும், துர்நடத்தை, திறமையின்மை அல்லது கடமையிலான தவறுகை என்பவற்றுக்காக இடைநிறுத்தப்படலாமென்பதுடன், அத்தகைய சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானமொன்றின்மீது, அத்தகைய விசாரணயின் பின்னர் குற்றவாளியாகக் காணப்படின் பதவியிலிருந்து நீக்கவும்படலாம் அல்லது வலுக்கட்டாயமாக இளைப்பாற்றவும்படலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அறுபது வயதையடைந்துள்ளவரும், சபையின் அபிப்பிராயத்தில் அத்தகைய பதவியைத் தொடர்ந்து வகிப்பதற்குத் தகுதி வாய்ந்தவராகவுள்ளவருமான ஆசிரியரொருவர், ஆகக்கூடியது ஐந்தாண்டுகளைக்கொண்ட காலப்பகுதியொன்றுக்கு ஆசிரியரொருவராக ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றுவதற்கு எவ்வாறாயினும் ஒருதடவையில் ஓராண்டிற்கு மேற்படாத காலத்திற்கு ஆட்சேர்க்கப்படலாம்.

(3) பகிரங்க அலுவலர்களின் இளைப்பாற்று வயது தொடர்பான அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகள், பல்கலைக்கழகத்தில் ஏதேனும் கல்விசாராப் பதவியை வகிப்போரின் இளைப்பாற்று வயது தொடர்பாக ஏற்புடையற்பாலனவாதல் வேண்டும் :

ஆயின், அத்தகைய ஏதேனும் பதவியை வகிப்பவர், சபையினாலான விசாரணையொன்று முடிவுறும்வரை எந்நேரத்திலும், துர்நடத்தை, திறமையின்மை அல்லது கடமையிலான தவறுகை என்பவற்றுக்காக இடைநிறுத்தப்படலாமென்பதுடன், சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானமொன்றின்மீது, அத்தகைய விசாரணயின் பின்னர் குற்றவாளியாகக் காணப்படின் பதவியிலிருந்து நீக்கவும்படலாம் அல்லது வலுக்கட்டாயமாக இளைப்பாற்றவும்படலாம்.

(4) முப்பத்தைந்தாம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட தகுதிகாண் நிலைக் காலப்பகுதியைப் பூர்த்திசெய்யுமுன்னர் -

(அ) ஆசிரியர் பதவியை வகிக்கின்ற ஆளொருவர் அறுபது வயதையடையுமிடத்து ; அல்லது

(ஆ) கல்விசாராப் பதவியொன்றை வகிக்கின்ற ஆளொருவர், (3) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையிற் குறித்துரைக்கப்பட்ட இளைப்பாறும் வயதையடையுமிடத்து,

அத்தகைய ஆள், அவர் அவ்வயதை எத்தேதியன்று அடைகின்றாரோ அத்தேதியிலிருந்து சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

(5) பதவியிலிருந்து நீக்கப்படுகின்றவரும் அல்லது அவரது பதவியிலிருந்து வலுக்கட்டாயமாக இளைப்பாற்றப்படுகின்றவரும் அல்லது துர்நடத்தை, திறமையின்மை அல்லது கடமையிலான தவறுகை என்பவற்றுக்காக வேறுவகையில் தண்டிக்கப்படுகின்ற வருமான பல்கலைக்கழகத்தில் ஒரு பதவியை வகிக்கின்றவரான ஒவ்வொருவரும், அத்தகைய பதவிநீக்கம் அல்லது இளைப்பாறுகை அல்லது வேறு தண்டனை என்பவற்றுக்கெதிராகப் பல்கலைக்கழக மேன்முறையீட்டுச் சபைக்கு மேன்முறையீடு செய்யலாம்.

*பல்கலைக்கழகத்தின் பணியாட்டொகுதிக்குப் பகிரங்க அலுவலர்களை நியமித்தல்.*

**37.** (1) சபையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்க சேவையிலிலுள்ள அலுவலரொருவர், அவ்வலுவலரினதும், அவ்வலுவலர் எந்த அமைச்சினால் அல்லது அமைச்சின்கீழ் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளாரோ அந்த அமைச்சின் செயலாளரினதும், அரசாங்க நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் செயலாளரினதும் மற்றும் பகிரங் சேவை ஆணைக்குழுவினதும் சம்மத்துடன், சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிகளுக்கு ஆசிரியர் பதவியொன்றுக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்று சம்மதத்துடன் ஆசிரியரொருவராக நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) ஆயிரத்துத்தொளாயிரத்துத் தொண்ணூற்றோராம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள்,

பல்கலைக்கழகத்தின் ஆசிரியரொருவரென்ற பதவிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படும் பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், பல்கலைக்கழகத்தின் ஆசிரியரொருவரென்ற பதவிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படும் பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(3) குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு அரசாங்கத்துக்குச் சேவையாற்றுவதற்கு உடன்பட்டு அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்டுள்ள எவரேனுமாளைப் பல்கலைக்கழகம் தொழிலுக்கமர்த்துமிடத்து, அவ்வாளினால் பல்கலைக்கழகத்துக்கு ஆற்றப்படும் ஏதேனும் சேவைக் காலப்பகுதி, அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்துக்கு ஆற்றப்பட்ட சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

உயர்கல்வி நிறுவனங்களின் ஆசிரியர்களைப் பல்கலைக் கழகத்தின் பணியாட் டொகுதிக்கு நியமித்தல்.

**38.** சபையின் வேண்டுகோளின்பேரில், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் உயர்கல்வி நிறுவனத்தின் சேவையிலுள்ள எவரேனும் ஆசிரியர், அத்தகைய ஆசிரியரினதும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் மற்றும் அந்நிறுவனத்தின் ஆளும் அதிகாரசபையினதும் சம்மதத்துடன், சபையினாலும் அத்தகைய உயர்கல்வி நிறுவனத்தினாலும் உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளின்மேல், சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குப் பல்கலைக்கழகத்தின் ஆசிரியரொருவரென்ற பதவிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம். அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பதவிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம். அத்தகைய ஆசிரியர் பல்கலைக்கழகத்தின் பணியாட்டொகுதியிலுள்ள வேறெவரேனும் ஆசிரியர் அமைந்தவராகவிருக்கும் அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தவராகவிருத்தலும் வேண்டும்.

## பாகம் IX

### பல்கலைக்கழக மேன்முறையீட்டுச் சபை

**39.** (1) அமைச்சர், காலத்துக்குக்காலம், பேராழியியல், கடல்சார் எந்திரவியல், கடற்றொழில் மற்றும் சமுத்திர அறிவியல், முகாமைத்துவம், கல்விசார் நிருவாகம், நிதி முகாமைத்துவம் மற்றும் சட்ட அல்லது வேறு இயைபான சேவைத்துறைகள் ஆகிய துறைகளில் அறிவும் அனுபவமும் கொண்டுள்ள ஆட்களிலிருந்து ஒன்பது ஆட்களுக்குக் குறையாதவர்களைக் கொண்டுள்ள விசாரணை மற்றும் நுண்ணாய்வுக் குழாமொன்றை நியமித்தல் வேண்டும். *விசாரணை மற்றும் நுண்ணாய்வுக் குழாத்தின் நியமனம்.*

(2) விசாரணை மற்றும் நுண்ணாய்வுக் குழாத்தின் உறுப்பினரொருவராக நியமிக்கப்பட்ட ஆளொருவர், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்தாண்டுகளைக் கொண்டவொரு காலப் பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(3) விசாரணை மற்றும் நுண்ணாய்வுக் குழாத்தின் உறுப்பினரொருவர், அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்படும் எழுத்தின் மூலம் அவரது பதவியிலிருந்து விலகலாம்.

**40.** (1) (அ) பல்கலைக்கழகத்தின் எவரேனும் பணியாட்டொகுதியுறுப்பினரினால், ஒரு நியமனம், பதவியுயர்வு, பதவிநீக்கம், இடைநிறுத்துகை, அவருக்கெதிராக எடுக்கப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கை அல்லது ஏதேனும் சம்பள முரண்பாடு தொடர்பில் ஏதேனும் மேன்முறையீடு செய்யப்படுமிடத்து ; அல்லது *பல்கலைக்கழக மேன்முறையீட்டுச் சபையின் அமைப்பு.*

(ஆ) பல்கலைக்கழகத்தின் பணிகள் பற்றிய ஏதேனும் கருமம் தொடர்பில் ஏதேனும் நுண்ணாய்வு செய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுமிடத்து,

சபையானது, விடயத்துக்கேற்ப, அத்தகைய மேன்முறையீடு பற்றி விசாரணை செய்வதற்கு அல்லது அத்தகைய நுண்ணாய்வை நடாத்துவதற்கு, 39 ஆம் பிரிவின்கீழ் விசாரணை மற்றும் நுண்ணாய்வுக் குழாத்துக்கு அமைச்சரினால் நியமிக்கப்பட்ட ஆட்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட மூன்று உறுப்பினர்களைக் கொண்டுள்ள பல்கலைக்கழக மேன்முறையீட்டுச் சபையொன்றாகமைதல் வேண்டும்.

(2) பல்கலைக்கழக மேன்முறையீட்டுச் சபையின் உறுப்பினர்கள், அத்தகைய சபையின் தவிசாளராகவிருப்பதற்கு அதன் உறுப்பினர்களுள் ஒருவரைத் தம்முள்ளிலிருந்து தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(3) பல்கலைக்கழக மேன்முறையீட்டுச் சபையின் செயலாளர் ஒருவர் அத்தகைய சபையின் தவிசாளரொருவரினால் நியமிக்கப்பட்டு இருத்தல் வேண்டும்.

(4) ஒரு பல்கலைக்கழக மேன்முறையீட்டுச் சபையின் நடவடிக்கைகளை நடாத்துவதற்கான நடவடிக்கைமுறை, அதற்கென ஆக்கப்பட்ட விதிகளின்மூலம் சபையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(5) விடயத்துக்கேற்ப, மேன்முறையீடு பற்றிய ஒரு விசாரணையின் முடிவில் அல்லது நுண்ணாய்வு நடாத்தப்படுவதன் முடிவில், பல்கலைக்கழக மேன்முறையீட்டுச் சபையின் முடிபையும் அதற்கான காரணங்களையும், அத்தகைய மேன்முறையீடு அல்லது நுண்ணாய்வு பற்றிய அறிக்கையுடன் சேர்த்து சபைக்கு அறிவித்தல் அச்சபையின் தவிசாளரினது கடமையாதல் வேண்டும். மேலும், முடிபினதும் காரணங்களினதும் பிரதியொன்றும், அத்தகைய முடிபு திகதியிலிருந்து ஒரு வாரத்தினுள், மேன்முறையீட்டைச் செய்த ஆளுக்குப் பதிவஞ்சல்மூலம் அனுப்பப்படுதலும் வேண்டும்.

(6) பல்கலைக்கழக மேன்முறையீட்டுச் சபையின் உறுப்பினர்களுக்கு, அவர்களினால் விசாரணை செய்யப்பட்ட ஒவ்வொரு மேன்முறையீடு தொடர்பிலும் அல்லது அவர்களினால் நடாத்

தப்பட்ட ஒவ்வொரு நுண்ணாய்வு தொடர்பிலும், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சர் தீர்மானிக்கவேண்டியவாறான அத்தகைய படி செலுத்தப்படுதல் வேண்டும்.

ஒரு பல்கலைக்கழக மேன்முறையீட்டுச் சபையின் முடிபுக் கெதிரான மேன் முறையீடுகள்.

**41.** நாற்பதாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் மேன்முறையீடு தொடர்பில் பல்கலைக்கழக மேன்முறையீட்டுச் சபையின் முடிபினால் இன்னலுறும் ஆளொருவர், முடிபும் அதற்கான காரணங்களும் 40 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின்கீழ் பதிவஞ்சல்மூலம் அவ்வாளுக்கு அனுப்பப்பட்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்களினுள் அத்தகைய முடிபுக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம்.

ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் உறப்பட்ட செலவுகள் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல்.

**42.** (1) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் ஒரு பல்கலைக்கழக மேன்முறையீட்டுச் சபையினால் அல்லது அதற்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய பல்கலைக்கழக மேன்முறையீட்டுச் சபையினால் உறப்பட்ட ஏதேனும் செலவு பல்கலைக்கழக நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் பல்கலைக்கழக மேன்முறையீட்டுச் சபைக்குச் செலுத்தப்பட்ட அல்லது அதனால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுதொகைகள் அந்நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(2) பல்கலைக்கழக மேன்முறையீட்டுச் சபையின் உறுப்பினரொருவரினால் இச்சட்டத்தின்கீழ் அல்லது தோதான ஏதேனும் சாசனத்தின்கீழ் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் அத்தகைய செயல் தொடர்பில், ஏதேனும் நீதிமன்றத்தின்முன்னர் அவருக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரினால் உறப்பட்ட ஏதேனும் செலவு, அச்செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால், அத்தகைய செலவு அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அறவிடப்பட்டாலொழிய, பல்கலைக்கழகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

## பாகம் X

### நிதி

பல்கலைக்கழக நிதியம்.

**43.** (1) பல்கலைக்கழகம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் ; பின்வருவன அதனுள் வரவுவைக்கப்படுதல் வேண்டும் :-

(அ) அதன் பயன்பாட்டுக்காகப் பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்பட்ட எல்லாப் பணங்களும் ;

(ஆ) எத்தகையதுமான ஏதேனும் மூலத்திலிருந்து நன்கொடைகள் அல்லது மானியக்கொடைகள் என்றவகையாகப் பல்கலைக்கழகத்தினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(இ) எவையேனும் துணைவிதிகளின் ஏற்பாடுகளுக்கிணங்கப் பல்கலைக்கழகத்துக்குச் செலுத்தப்பட்ட கட்டணங்கள் ; அத்துடன்

(ஈ) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதிக்கு அல்லது ஒழுங்குவிதிக்கு இணங்கப் பல்கலைக்கழகத்துக்குச் செலுத்தப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட வேறெவையேனும் கொடுப்பனவுகள்.

(2) இச்சட்டத்தின்கீழ் பல்கலைக்கழகம் அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அதனால் உறப்பட்ட எல்லாச் செலவினங்களையும் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் பல்கலைக்கழகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

பல்கலைக் கழகத்துக்கு உதவி மானியக் கொடைகள்.

**44.** திறைசேரிப் பிரதிச் செயலாளர், ஒவ்வொரு நிதியாண்டும் தொடங்கிய பின்னர் செயல்முறைக்குகந்ததாக இருக்கக்கூடியவாறு விரைவாக, வருடாந்த ஒதுக்கீடு, குறைநிரப்பு வாக்கு என்றவகையாக அல்லது வேறுவகையாக, பல்கலைக்கழகத்துக்கு உதவி மானியக்கொடையொன்றாகப் பாராளுமன்றத்தினால் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளைப் பல்கலைக் கழகத்துக்குச் செலுத்துதல் வேண்டும்.

*வரவுசெலவுத் திட்ட மதிப்பீடு களையும் வருடாந்த நிதி ஒதுக்கீடு களையும் சபை கவனத்திற் கொள்ளுதல்.*

**45.** நாற்பத்து ஆறாம் பிரிவின் (ஈ) என்னும் பந்தியின்கீழ் நிதிப்பணிப்பாளரின் உதவியுடன் தயாரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தின் வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளும் வருடாந்த நிதி ஒதுக்கீடுகளும், துணைவிதியினால் விதித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய தேதிக்கு முன்னர் சபையினால் கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும். சபையானது தகுதியானவையென அது கருதுகின்றவாறாக அத்தகைய மதிப்பீடுகளிலும் நிதி ஒதுக்கீடுகளிலும் அத்தகைய மாற்றங்களைச் செய்யலாமென் பதுடன், அவற்றை முடிவடைந்த நிதியாண்டுக்கான பல்கலைக்கழகத்தின் கணக்குகளுடன் சேர்த்து அமைச்சரிடம் சமர்ப்பித்தலும் வேண்டும் ; அத்துடன் அமைச்சர், அவசியமென அவர் கருதுமிடத்து, அத்தகைய எவையேனும் மதிப்பீடுகளையும் நிதி ஒதுக்கீடுகளையும் திருத்தலாம்.

*நிதிப் பணிப்பாளரின் கடமைகள்.*

**46.** பின்வருவன பல்கலைக்கழகத்தின் நிதிப்பணிப்பாளரின் கடமையாதல் வேண்டும் :-

(அ) பல்கலைக்கழகத்தின் கணக்குகளை விதிகளினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் அத்தகைய முறையிலும் வைத்திருத்தல் ;

(ஆ) பல்கலைக்கழகத்தின் நிதியத்தினுள் செலுத்தப்பட்ட எல்லாப் பணங்களையும் பெறுதலும் அத்தகைய பணங்களை முறையான கணக்குத் தலைப்புகளுக்கு வரவு வைத்தலும் ;

(இ) ஏற்புடையதான சட்டங்கள், நிதிசார் ஒழுங்குவிதிகள் மற்றும் சுற்றுநிருபங்களுக்கமைவாக எல்லாக் கொடுப்பனவுகளையும் செய்தல் ;

(ஈ) பல்கலைக்கழகத்தின் வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளையும் வருடாந்த நிதி ஒதுக்கீடுகளையும் தயாரிப்பதில் சபைக்கு உதவுதல் ; அத்துடன்

(உ) அவசியமானவிடத்து, இச்சட்டத்தின் 50 ஆம் பிரிவின்கீழ் எவையேனும் குறைநிரப்பு மதிப்பீடுகளைத் தயாரித்தல்.

*குறிப்பிட்ட நோக்கங்களுக்கான மானியக் கொடைகளிலிருந்தான வருமானத்துக்குத் தனித்தனியாகக் கணக்குக் காட்டப்படுதல்.*

**47.** குறிப்பிட்ட நோக்கங்களுக்காக அளிக்கப்பட்ட மானியக் கொடைகளிலிருந்து அல்லது குறிப்பிட்ட குறிக்கோள்களுக்கான அறக்கொடைகளிலிருந்து பல்கலைக்கழகத்தினால் பெறப்பட்ட வருமானம் பல்கலைக்கழகத்தின் கணக்குகளில் தனித்தனியாகக் கணக்குக்காட்டப்படுதல் வேண்டுமென்பதுடன், பல்கலைக் கழகத்தின் பொது நோக்கங்களுக்காக, அல்லது அத்தகைய மானியக்கொடைகள் அல்லது அறக்கொடைகள் எந்த நோக்கங் களுக்காக அல்லது குறிக்கோள்களுக்காக அளிக்கப்பட்டனவோ அந்த நோக்கங்களுக்காக அல்லது குறிக்கோள்கள் அல்லாத வேறு எவையேனும் நோக்கங்களுக்காக அல்லது குறிக்கோள்களுக்காக அத்தகைய வருமானத்திலிருந்து கொடுப்பனவெதுவும் செலுத்தப் படுதலுமாகாது.

*சபையானது வரவுசெலவுத் திட்ட மதிப்பீடு களையும் வருடாந்த நிதி ஒதுக்கீடு களையும் ஏற்றுக் கொள்ளுதல்.*

**48.** சபையானது, தீர்மானத்தின்மூலம் பல்கலைக்கழகத்தின் வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளையும், வருடாந்த நிதி ஒதுக்கீடு களையும், வருடாந்தக் கணக்குகளையும், 53 ஆம் பிரிவின்கீழ் அமைச்சரிடம் அவை சமர்ப்பிக்கப்படுமுன்னர், ஏற்றுக்கொள்ளு தல் வேண்டும்.

*ஒரு வாக்கிலிருந்து இன்னொன்றுக்கு நிதிகளைக் கைமாற்றுதல்.*

**49.** திறைசேரியின் எழுத்திலான அங்கீகாரத்துக்கமைய, வருடாந்த மதிப்பீடுகளின் ஒரு வாக்கிலிருந்து இன்னொன்றுக்கு நிதிகளைக் கைமாற்றுதல், அவசியமேற்படும் விடயத்தில் சபைக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

*குறைநிரப்பு மதிப்பீடுகள்.*

**50.** (1) அவசியமேற்படும் விடயத்திலும் எதிர்பாராச் செல வினம் எதனையும் ஈடுசெய்வதற்கெனவும், செலவினம் பற்றிய குறைநிரப்பு மதிப்பீடுகளைத் தயாரித்து நிதிப்பணிப்பாளருக்கு எந்நேரத்திலும் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் எழுகின்ற மீண்டுவரும் தன்மை யினதான நிதிப்பொறுப்பு, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப் பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அளிக்கப்பட்ட அமைச் சரின் முன்னங்கீகாரமின்றி உறப்படுதலாகாது.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் தயாரிக்கப்பட்ட குறைநிரப்பு மதிப்பீடுகள், அவற்றை ஏற்றுக்கொள்வதற்காகச் சபையிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், ஏற்றுக்கொள்ளப் பட்டவுடன், அடுத்துவரும் ஆண்டிற்கான வருடாந்த ஒதுக் கீட்டுடன் சேர்த்து அமைச்சருக்குக் கிடைக்கக்கூடியனவாக்கப்படு தலும் வேண்டும்.

**51.** (1) பல்கலைக்கழகத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும். *நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்.*

(2) பகிரங்க கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக் காய்வுசெய்தல் தொடர்பாக அரசியலமைப்பின் 154 ஆம் உறுப் புரையின் ஏற்பாடுகள், பல்கலைக்கழகத்தின் கணக்குகளினது கணக்காய்வுக்கும் அது தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

**52.** ஒவ்வொரு நிதியாண்டுக்காகவும் பல்கலைக்கழகத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் வர்த்தமானியில் வெளி யிடப்படுதல் வேண்டும். *கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளை வெளியிடுதல்.*

**53.** (1) பல்கலைக்கழகமானது, ஒவ்வொரு நிதியாண்டு தொடர்பிலும் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக் கையைப் பெற்றதிலிருந்து மூன்று மாதங்களினுள், அத்தகைய அறிக்கையின்மீது சபையினால் தெரிவிக்கப்பட்ட எவையேனும் கருத்துரைகளை, அத்தகைய அறிக்கை எக்கணக்குகள் பற்றிய கூற்றுத் தொடர்பானதோ அக்கணக்குகள் பற்றிய கூற்றுடன் சேர்த்து, அமைச்சருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். *வருடாந்தக் கணக்குகளும் கணக்காய்வாளர் தலைமையதி பதியின் அறிக்கையும் அமைச்சருக்கு அனுப்பப்படுதல்.*

(2) அமைச்சர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவருக்கு அனுப்பி வைக்கப்பட்ட எல்லா ஆவணங்களினதும் பிரதிகளை, அத்தகைய கணக்குகளும் அறிக்கையும் எவ்வாண்டு தொடர்பானவையோ அவ்வாண்டை அடுத்துவரும் ஆண்டின் முடிவுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் பட்டியலிடப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், பாராளு மன்றத்தின் பகிரங்கக் கணக்குக் குழுவின் முன்னர் வருகைதந்து அதிலிருந்து எழுகின்ற எவையேனும் வினாக்களுக்கு விடை யளித்தல் வேண்டும்.

## பாகம் XI

### மாணவர் சங்கமும் ஏனைய கழகங்களும்

**54.** (1) அப்போதைக்குப் பல்கலைக்கழகத்தின் மாணவர்களாக வுள்ள ஆட்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர் பிரதி நிதிகளைக் கொண்டுள்ள மாணவர் சங்கமொன்றைப் பல்கலைக் கழகம் கொண்டிருத்தல் வேண்டும். *மாணவர் சங்கம்.*

(2) மாணவர் சங்கத்துக்கான ஒவ்வொரு தேர்தலும், துணை வேந்தரினால் பெயர்குறித்து நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஆளினால் அல்லது ஆட்களினால், ஒவ்வொரு கல்வி யாண்டும் தொடங்கும்போது இரகசிய வாக்கெடுப்பின்மூலம் நடாத்தப்படுதல் வேண்டும்.

(3) மாணவர் சங்கத்தின் உறுப்பினர்களது பதவிக்காலம், அம்மாணவர் சங்கம் எக்கல்வியாண்டில் தேர்ந்தெடுக்கப் பட்டதோ அக்கல்வியாண்டின் முடிவில் முடிவுறுதல் வேண்டும்.

குறித்தசில சங்கங்களையும் ஏனைய கழகங்களையும் ஏற்றங்கீகரித்தல்.

**55.** (1) கல்விசார் அல்லது சமூகக் குறிக்கோள்களை முன் னெடுத்துச் செல்வதற்கான தனி நோக்கத்துக்காகத் தாபிக்கப்பட்ட தும், அதற்கென ஆக்கப்படும் துணைவிதிகளின்மூலம் சபை யினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய செயற் பாடுகளை அல்லது பணிகளைக் கொண்டுநடாத்தவுள்ளதுமான மாணவர்களின் ஏதேனும் சங்கத்தை அல்லது வேறு கழகத்தைச் சபையானது ஏற்றங்கீகரிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் சங்கத்தின் அல்லது வேறு கழகத்தின் உறுப்பாண்மை, முழுமையாகப் பல்கலைக்கழக மாணவர்களையே கொண்டிருத்தல் வேண்டும்.

(3) ஐம்பத்திநான்காம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஏற்றங்கீகரிக்கப்பட்ட சங்கங்களையும் வேறு கழகங்களையும் பதிவுசெய்யும்முறை, அவற்றின் பணிகள், அவற்றின் பதவிதாங்குநர்களை நியமிப்பதற்கான தேர்தல்களை நடாத்தும்முறை மற்றும் அத்தகைய பதவிதாங்குநர்களின் கடமைகளும் பணிகளும் என்பவற்றைச் சபையானது துணை விதிமூலம் குறித்துரைக்கலாம்.

அங்கீகரிக்கப் பட்ட செயற் பாட்டுக்காகச் சபையானது மாணவர் சங்கம் முதலியவற் றுக்குப் பணம் குறித்தொதுக்கு தல்.

**56.** சபையானது, காலத்துக்குக்காலம், மாணவர் சங்கத்துக்கு அல்லது 55 ஆம் பிரிவின்கீழ் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் சங்கத்துக்கு அல்லது வேறு கழகத்துக்கு, அங்கீகரிக்கப்பட்ட செயற்பாடுகளுக்காகச் சபையினால் அவசியமெனக் கருதப் படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளைக் காலத்துக் காலம் குறித்தொதுக்கலாம்.

*மாணவர் சங்கத்தின் அமைப்பு, கடமைகள் மற்றும் பணிகள் என்பவற்றைச் சபை விதித்துரைத்தல்.*

**57.** சபையானது, கட்டளைச்சட்டத்தின்மூலம் பின்வருவனவற்றை விதித்துரைக்கலாம் :-

(அ) மாணவர் சங்கத்தின் கடமைகளும் பணிகளும் ;

(ஆ) மாணவர் சங்கத்தின் பதவிதாங்குநர்களும், மாணவர் சங்கமாக அமைகின்ற மாணவர் பிரதிநிதிகளின் எண்ணிக்கையும், அவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையும் ;

(இ) மாணவர் சங்கத்தின் பதவிதாங்குநர்களினது கடமைகளும் பணிகளும் ;

(ஈ) மாணவர் சங்கமொன்று எந்நிலையியற் குழுவை அல்லது குழுக்களை நியமிக்கலாமோ அந்நிலையியற் குழுவும் அல்லது குழுக்களும், அத்தகைய குழுவின் கடமைகளும் பணிகளும் ;

(உ) மாணவர் சங்கத்துக்கும், 55 ஆம் பிரிவின்கீழ் சபையினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் சங்கத்துக்கும் அல்லது வேறு கழகத்துக்கும் குறித்தொதுக்கப்பட்ட நிதிகள் எந்நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்படுதல் வேண்டுமோ அந்நோக்கம் ; அத்துடன்

(ஊ) மாணவர் சங்கத்தினதும் ஏதேனும் சங்கத்தினதும் அல்லது வேறு கழகத்தினதும் கணக்குகள் எப்படிவத்திலும் முறையிலும் பேணப்பட்டு கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமோ அப்படிவமும் முறையும்.

*மாணவர் சங்த்தை, சங்கத்தை அல்லது வேறு கழகத்தை இடைநிறுத்துதல் அல்லது கலைத்தல்.*

**58.** மாணவர் சங்கம் அல்லது ஏதேனும் சங்கம் அல்லது வேறு கழகம், துணைவேந்தரின் அபிப்பிராயத்தில் பல்கலைக்கழகத்தின் நற்பெயரை மதிப்புக்குறைக்கின்ற அல்லது அதற்குப் பங்கம் விளைவிக்கின்றவொரு முறையில் நடந்துகொள்ளுமிடத்து அல்லது இச்சட்டத்தின் அல்லது தோதான ஏதேனும் சாசனத்தின் ஏற்பாட்டுக்கு முரணாகச் செயலாற்றுமிடத்து, துணைவேந்தர், விடயத்துக்கேற்ப அத்தகைய மாணவர் சங்கத்தை, சங்கத்தை அல்லது வேறு கழகத்தை இடைநிறுத்தலாம் அல்லது கலைக்கலாம்.

## பாகம் XII

### பொது ஏற்பாடுகள்

*பல்கலைக் கழகத்தின் ஏதேனும் அதிகார சபை உறுப்பினர் களாகவிருப் பதற்கான தகைமையீனம்.*

**59.** ஆளொருவர் பின்வருமாறிருப்பின், பல்கலைக்கழகத்தின் ஏதேனும் அதிகாரசபையின் உறுப்பினரொருவராக அல்லது பல்கலைக்கழகத்தின் அலுவலரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்:-

(அ) பொறுப்புவிடுக்கப்படாத வங்கி முறிந்தவராகவிருப்பின் அல்லது கடனிறுக்க வகையற்றவராகவிருப்பின் ;

(ஆ) ஒழுக்கக்கேட்டை உள்ளடக்கும் ஏதேனும் தவறுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின் ;

(இ) இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீனமற்றவராகக் காணப்படின் அல்லது வெளிப்படுத்தப்படின் ;

(ஈ) நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ, தாமாகவோ அல்லது அவரது சார்பில் வேறெவரேனுமாள் மூலமாகவோ அல்லது அவரது பயன்பாட்டுக்காக அல்லது நன்மைக்காக, பல்கலைக்கழகத்தினால் அல்லது அதன் சார்பில் ஆக்கப்பட்டதும், அவரது தொழில் ஒப்பந்தம் அல்லாததுமான வேறு ஏதேனும் ஒப்பந்தத்தின்கீழ் ஏதேனும் உரிமையை அல்லது நன்மையை வைத்திருப்பின் அல்லது துய்ப்பின் ;

(உ) பாராளுமன்ற உறுப்பினரொருவராக, மாகாண சபை உறுப்பினரொருவராக அல்லது ஓர் உள்ளூரதிகார சபை உறுப்பினரொருவராக இருப்பின் அல்லது வரின்;

(ஊ) துர்நடத்தைக்காக ஏதேனும் அதிகாரசபையின் உறுப்பாண்மையிலிருந்து அல்லது பல்கலைக்கழகத்தின் ஏதேனும் பதவியிலிருந்து அகற்றப்படின் ;

(எ) சுகவீனம் அல்லது உடல் அல்லது உளக் குறைபாடு காரணமாக, ஓர் அதிகாரசபையின் உறுப்பினரொருவராகத் தொடர்ந்திருப்பதற்கு அல்லது தொடர்ந்து பல்கலைக்கழகப் பதவிவகிப்பதற்குத் தகுதியற்றவராகக் காணப்படின் ;

(ஏ) துர்நடத்தைக்கு அல்லது ஊழலுக்குக் குற்றவாளியாகக் காணப்படின் ; அல்லது

(ஐ) அவரது பதவியின் பாரிய அதிகாரத் துஷ்பிரயோகத்துக்குக் குற்றவாளியாகக் காணப்படின்.

*பல்கலைக் கழகத்தின் அலுவலர் களும் சேவையாளர் களும் தண்டனைச் சட்டக்கோவை யின் கீழ் பகிரங்க சேவையாளர் களாகக் கருதப்படுதல்.*

**60.** பல்கலைக்கழகப் பணியாட்டொகுதியின் எல்லா அலுவலர்களும் உறுப்பினர்களும் (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப் படுதல் வேண்டும்.

*இலஞ்சச் சட்டத்தின் கருத்துக்குட்பட்ட பல்கலைக்கழகம் அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவன மொன்றாகக் கருதப்படுதல்.*

**61.** பல்கலைக்கழகமானது, இலஞ்சச் சட்டத்தின் கருத்துக் குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் அட்டவணைப்படுத்தப் பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப் படுதலும் வேண்டும்.

*விரும்பத்தகாத ஆட்கள் சுற்றாடலினுள் பிரவேசிப்பதன் மீதான தடை.*

**62.** (1) பல்கலைக்கழகத்தின் அலுவலர், பணியாட்டொகுதி உறுப்பினர் அல்லது மாணவர் ஒருவர் தவிர, பல்கலைக்கழகத் தினுள் எவரேனுமாள் சமுகமளித்திருத்தல், துணைவேந்தரின் அபிப்பிராயத்தில் பல்கலைக்கழகத்தின் அல்லது அதன் மாணவர்களின் சேமநலத்துக்கு உகந்ததாகவிராதவிடத்து, துணைவேந்தர், சபையின் சம்மதத்துடன், தம்பக்க வழக்கை எடுத்துரைப்பதற்கு அத்தகைய ஆளுக்குச் சந்தர்ப்பமொன்றை அளித்தபின்னர், அறிவித்தலொன்றின்மூலம், பல்கலைக்கழகத் தின் சுற்றாடலினுள் அல்லது அத்தகைய அறிவித்தலில் குறித் துரைக்கப்படக்கூடியவாறாக அதன் அத்தகைய பாகத்தினுள் அத்தகைய ஆள் பிரவேசிப்பதனை அல்லது தங்கியிருப்பதனைத்

தடைசெய்கின்ற அத்தகைய அறிவித்தலை அவரது கைக்கப்பட எழுத்தின்மூலம் அத்தகைய ஆளுக்குச் சேர்ப்பிக்கலாம். அத்தகையை தடை சபையினால் இல்லாதொழிக்கப்படும்வரை வலுவில் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

(2) துணைவேந்தரின் கைப்பட சான்றிதழொன்றில் பெயர்குறிப்பிடப்பட்ட எவரேனுமாள், (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, பல்கலைக்கழகத்தின் சுற்றாடலினுள் அல்லது அதன் ஏதேனும் பாகத்தினுள் பிரவேசிப்பதற்கு அல்லது தங்கியிருப்பதற்குத் தடைசெய்யப்பட்டுள்ளாரென்ற பொருள்பட அச்சான்றிதழ் சான்றாக ஏல்தகவுடையதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சான்றிதழில் உறப்பட்ட நிகழ்வகள் பற்றி முதற்றோற்றச் சான்றாதலும் வேண்டும்.

(3) பல்கலைக்கழகத்தின் சுற்றாடலினுள் அல்லது அதன் பாகத்தினுள் பிரவேசிப்பதற்கு அல்லது தங்கியிருப்பதற்கு (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் தடைசெய்யப்பட்டுள்ளவரும், நியாயமான காரணமின்றி அத்தகைய தடைக்கு முரணாக அத்தகைய சுற்றாடலினுள் அல்லது அதன் பாகத்தினுள் பிரவேசிக்கின்றவரும் அல்லது தங்கியிருக்கின்றவருமான எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவரினாலான சுருக்கவிளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், அத்தகைய சுற்றாடலினுள் அல்லது அதன் பாகத்தினுள் அவர் பிரவேசித்துள்ள அல்லது தங்கியுள்ள ஒவ்வொரு நாள் அல்லது அதன் பாகம் தொடர்பில் ஆயிரம் ரூபாவான குற்றப்பணத்திற்கு அல்லது மூன்றாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதியொன்றிற்கான மறியற்றண்டனையொன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழான தவறொன்று, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவைச் சட்டத்தின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கத்துக்காகவும் பிடியாணையின்றிக் கைதுசெய்தகு மற்றும் பிணையில் விடுபடத்தகு தவறொன்றாதல் வேண்டும்.

*நியதிச் சட்டங்கள்.*

**63.** (1) சபையானது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் சபையினால் நியதிச்சட்டங்களை ஆக்கலாம்:-

(அ) வேறுவகையில் ஏற்பாடுசெய்யப்படாதவிடத்து, பல்கலைக்கழகத்தின் ஏதேனும் அதிகாரசபையிலான வெற்றிடங்களை நிரப்பும்முறையும், அதனைக் கூட்டுதலும் ;

(ஆ) அளிக்கப்படவேண்டிய பட்டங்களையும் வேறு கல்விசார் திறமைச்சித்திகளையும் தீர்மானித்தல் ;

(இ) கௌரவப் பட்டங்களை அல்லது வேறு திறமைச் சித்திகளை அளிப்பதற்கு ஏற்புடையற்பாலனவான கட்டளைக்கற்கள் ;

(ஈ) அவற்றுக்கான நிதிகள் அல்லது ஆதனம் எத்தகை யதுமான எம்முறையிலேனும் வழங்கப்படக்கூடிய ஆதரவூதியங்கள், புலமைப்பரிசில்கள், சிறப்புப்பரிசில் கள், பணவுதவிகள், பதக்கங்கள் மற்றும் வேறு பரிசில் கள் என்பவற்றை ஏற்படுத்துதலும் வழங்குதலும் ; அத்துடன்

(உ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் எக்கருமங்களுக்காக நியதிச்சட்டங்கள் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப் படுகின்றதோ அல்லது தேவைப்படுத்தப்படுகின்றதோ அக்கருமங்கள் எல்லாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வொரு நியதிச் சட்டமும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென் பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதன் கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு தேதி யன்று வலுவுக்குவருதலும் வேண்டும்.

**64.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் சபையினால் துணைவிதிகள் ஆக்கப்படலாம் :- துணைவிதிகள்.

(அ) பட்டங்கள், திப்புளோமாக்கள் மற்றும் வேறு கல்விசார் திறமைச்சித்திகள் என்பவற்றை வழங்குவதற்காகச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கற்கைநெறிகள் ;

(ஆ) எந்நியதிகளுக்கமைய மாணவர்கள் கற்கைநெறிகளுக்கு அனுமதிக்கப்படவேண்டுமோ அந்நிபந்தனைகளும், பட்டங்கள், திப்புளோமாக்கள் மற்றும் வேறு கல்விசார் திறமைச்சித்திகள் என்பவற்றுக்கு விதித்துரைக்கப்பட்ட பரீட்சைகளும் ;

(இ) கற்கைநெறிகள், பரீட்சைகள் மற்றும் பட்டங்களையும் அத்துடன் வேறு கல்விசார் திறைமைச்சித்திகளையும் அளிப்பதற்காக இறுக்கப்படவேண்டிய கட்டணங்கள் ;

(ஈ) பல்கலைக்கழகத்தின் பல்வேறு அதிகாரசபைகளுக்கும் ஏனைய குழுக்களுக்கும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தல் சம்பந்தமான எல்லாக் கருமங்களும் ;

(உ) பரீட்சகர்களை நியமிப்பதற்கான நிபந்தனைகளும் முறையும், அவர்களின் கடமைகள், அவர்களுக்குச் செலுத்தப்படவேண்டிய கட்டணங்கள் மற்றும் பரீட்சைகளை நடாத்துதலும் பரீட்சைகளில் தராதரங்களைப் பேணுதலும் ; அத்துடன்

(ஊ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் எக்கருமங்களுக்காகத் துணைவிதிகள் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்படுகின்றதோ அல்லது தேவைப்படுத்தப்படுகின்றதோ அக்கருமங்கள் எல்லாம்.

(2) பல்கலைக்கழகத்திலான கற்பித்தல் மற்றும் பரீட்சைகள் என்பன தொடர்பான அல்லது சம்பந்தமான ஏதேனும் கருமம் தொடர்பிலானவொரு துணைவிதி, அத்தகைய துணைவிதியின் வரைவொன்று கல்விப் பேரவையினால் முதலில் தயாரிக்கப்பட்டு சபையிடம் சமர்ப்பிக்கப்படும்வரை, சபையினால் ஆக்கப்படுதலாகாது.

(3) சபையினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு துணைவிதியும் அதன்கண் குறித்துரைக்கப்படவேண்டியவாறான அத்தகைய தேதியன்று வலுவுக்குவருதல் வேண்டும்.

விதிகள்.

**65.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, பல்கலைக்கழகத்தின் ஏதேனும் அதிகாரசபை -

(அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் எக்கருமங்களுக்காக விதிகள் ஆக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றதோ அக்கருமங்கள் எல்லாம் தொடர்பிலும் ; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அத்தகைய அதிகாரசபை அதன் கடமைகளையும் பணிகளையும் கொண்டுநடாத்துவதற்கு அதனை இயலச்செய்வதற்கென ஏற்பாடுசெய்யப்படு வதற்குத் தேவைப்படுத்தப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும்,

விதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் பல்கலைக்கழகத்தின் அதிகார சபையொன்றினால் ஆக்கப்பட்ட விதிகள் அதன்கண் குறித் துரைக்கப்படவேண்டியவாறான அத்தகைய தேதியன்று வலுவுக்குவருதல் வேண்டும்.

**66**. ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள், இச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகத்துக்கு அல்லது அதுதொடர்பில் ஏற்புடையனவாதலாகாது.

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையன வாகா.*

## பாகம் XIII

### பொருள்கோடல்

**67**. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத் தினாலொழிய -

பொருள்கோடல்.

"கல்விப் பேரவை" என்பது, பல்கலைக்கழகத்தின் உச்சிக் கல்விக்குழு என்று பொருளாகும் ;

"தோதான சாசனம்" என்பது, இச்சட்டத்தின் ஏற்பாடு களுக்கிணங்க ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளைச்சட்டம், நியதிச்சட்டம், துணைவிதி, ஒழுங்குவிதி அல்லது விதி என்று பொருளாகும் ;

"அதிகாரசபை" என்பது, இச்சட்டத்தின் 18 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட அதிகாரசபை என்று பொருளாகும்;

*"துணைவிதி"* என்பது, இச்சட்டத்தின் 64 ஆம் பிரிவின்கீழ் சபையினால் ஆக்கப்பட்டவொரு துணைவிதி என்று பொருளாகும் ;

*"பட்டம்"* என்பது, பல்கலைக்கழகத்தினால் அளிக்கப்பட்ட பட்டத்துக்கு முன்னரான மற்றும் பட்டத்துக்குப் பின்னரான பட்டங்கள் என்று பொருளாகும் ;

*"ஆளும் சபை"* என்பது, பல்கலைக்கழகத்தின் ஒட்டுமொத்த நிருவாகக்குழு என்று பொருளாகும் ;

*"அமைச்சர்"* என்பது திறன்கள் அபிவிருத்தி என்னும் விடயம் எவ்வமைச்சருக்கு குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அவ்வமைச்சர் என்று பொருளாகும் ;

*"கல்விசாராப் பணியாட்டொகுதி"* என்பது, பல்கலைக்கழகத்தின் ஆசிரியப் பணியாட்டொகுதியைச் சேர்ந்தவர்களல்லாத எல்லாப் பணியாட்டொகுதி உறுப்பினர்களும் என்று பொருளாகும் ;

*"கட்டளைச்சட்டம்"* என்பது, இச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் சபையினால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளைச்சட்டம் என்று பொருளாகும் ;

*"விதி"* என்பது, இச்சட்டத்தின் 65 ஆம் பிரிவின்கீழ் பல்கலைக்கழகத்தின் ஏதேனும் அதிகாரசபையினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி என்று பொருளாகும் ;

*"நியதிச்சட்டம்"* என்பது, இச்சட்டத்தின் 63 ஆம் பிரிவின்கீழ் சபையினால் ஆக்கப்பட்ட ஏதேனும் நியதிச்சட்டம் என்று பொருளாகும் ; அத்துடன்

*"ஆசிரியப் பணியாட்டொகுதி"* என்பது, ஒரு சிரேட்ட பேராசிரியர், பேராசிரியர், நூலகப் பொறுப்பாளர், இணைப் பேராசிரியர், சிரேட்ட விரிவுரையாளர், சிரேட்ட உதவி நூலகப் பொறுப்பாளர், விரிவுரையாளர் மற்றும் உதவி நூலகப் பொறுப்பாளர் என்போரை உள்ளடக்கும்."

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**68**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பல்கலைக்கழகம் தாபிக்கப்படும் வரையிலான விசேட ஏற்பாடுகள்.*

**69.** *(1)* இச்சட்டத்தின் வேறெவையேனும் ஏற்பாடுகளில் முரணாக அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் கீழ் பல்கலைக்கழகத்தின் பீடங்களைத் தாபிக்கும் மற்றும் ஒழுங்கு படுத்தும்வரையும், பல்வேறு அதிகாரசபைகளை அமைக்கும் வரையும், அலுவலர்களையும் ஏனைய பணியாட்டொகுதியையும் நியமிக்கும் வரையும், சனாதிபதி , திறன்கள் அபிவிருத்தி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சரின் கலந்தாலோசனையுடன், பின்வருவோரைக் கொண்டுள்ள இடைக்காலக் குழுவொன்றை நியமித்தல் வேண்டும் :-

(அ) திறன்கள் அபிவிருத்தி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் ;

(ஆ) 1999 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, தேசிய கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் நிறுவகச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் நிறுவகத்தின் தவிசாளர் ;

(இ) 1999 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, தேசிய கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் நிறுவகச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி.

*(2)* ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட இடைக்காலக் குழு, (4) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து தொடங்குகின்ற மூன்று மாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பணியாற்றுதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின்கீழ் பல்கலைக்கழகம் அதன் செயற்பாடுகளைத் தொடங்குவதனை இயலச்செய்வதற்கு அவசியமாகவிருக்கக் கூடியவாறான அத்தகைய எல்லா வழிமுறைகளையும் எடுப்பதற்கும் ஒழுங்கேற்பாடுகளைச் செய்வதற்கும் பொறுப்பாக விருத்தலும் வேண்டும்.

(3) இடைக்காலக்குழு (2) ஆம் உட்பிரிவின்கீழ் அதன் பணிகளை நிறைவேற்றுவதில், பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) பல்கலைக்கழகத்தின் பணியாட்டொகுதியையும், மாணவர்களையும், சாதனங்களையும், காணியையும், கட்டிடங்களையும் மற்றும் வேறு வசதிகளையும் குறித்தொதுக்குதலும், ஒவ்வொரு பீடத்தினதும் கட்டமைப்பையும் அமைப்பையும் மற்றும் அத்தகைய பீடங்களுக்குக் குறித்தளிக்கப்படவேண்டிய பாடநெறிகளையும் பாடங்களையும் தீர்மானித்தலும் ; அத்துடன்

(ஆ) பல்கலைக்கழகம் சம்பந்தமான ஏதேனும் கருமம் தொடர்பில், பல்கலைக்கழகத்தினது சபையின் மற்றும் வேறேதேனும் அதிகாரசபையின் தத்துவங்களைப் பிரயோகித்தலும், அத்தகைய காலப்பகுதியின்போது, பல்கலைக்கழகத்தின் பணியாற்றுகையை ஒழுங்குபடுத்தும், நிறைவேற்றும் மற்றும் பணிக்கும் நோக்கத்துக்காக, இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட அலுவலர்கள் உட்பட்ட எவரேனுமாளை அல்லது ஆட்களை நியமித்தலும்.

(4) இரண்டாம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட மூன்று மாதங்களைக்கொண்ட காலப்பகுதி, வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவிப்பின்மூலம் மேலும் மூன்று மாதங்களை விஞ்சாத காலப்பகுதிக்கு, திறன்கள் அபிவிருத்தி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் விதப்புரையின்மீது அமைச்சரினால் நீடிக்கப்படலாம். அறிவிப்பானது, அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள், அதன் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத அறிவிப்பொன்று அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதனதும் செல்லுபடிக்குப் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் அறிவிப்பு எத்தேதியன்று ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்பட வேண்டுமோ அத்தேதி வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

தேசிய தொழினுட்பக் கல்வி நிறுவகத்தின் அலுவலர் களுக்கும் சேவையாளர் களுக்கும் பல்கலைக் கழகத்தில் தொழில் முனையப்படுதல்.

**70.** (1) ஆயிரத்துத்தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதாம் ஆண்டின் 36 ஆம் இலக்க, தேசிய கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் நிறுவகச் சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், (இப்பிரிவில் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1999 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, தேசிய கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் நிறுவகச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட தேசிய கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் நிறுவகத்தின் அலுவலர்களும் சேவையாளர்களும் நியமிக்கப்பட்ட தேதியன்றுள்ளவாறு அந்நிறுவகத்தின் பணியாட்டொகுதியிலுள்ளவர்களுமான அலுவலர்களும் சேவையாளர்களும், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதி முடிவுறு முன்னர், பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தருக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட எழுத்திலான கடிதத் தொடர்பின் மூலம், பல்கலைக்கழகத்தில் அல்லது 5 ஆம் பிரிவின் (ஏ) என்னும் பந்தியின்கீழ் தாபிக்கப்பட்ட தேசிய கடற்றொழில் மற்றும் கடலோரப் பயிற்சி நிறுவகத்தில் தொழில் முனையப்படும் பட்சத்தில், அத்தகைய அலுவலர் அல்லது சேவையாளர் அங்கு தொழிலை ஏற்பாரா அல்லராவென்பதை அத்தகைய துணை வேந்தருக்கு அறிவித்தல் வேண்டும்.

(2) முதலாவது துணைவேந்தரினால் பல்கலைக்கழகத்தில் தொழில் முனையப்படுகின்றவர்களும், அத்தகைய தொழிலை ஏற்பதற்கு விருப்பம் தெரிவிக்கின்றவர்களுமான நிறுவகத்தின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும், 71 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து விடயத்திற்கேற்ப பல்கலைக்கழகப் பணியாட்டொகுதி அல்லது 5 ஆம் பிரிவின் (ஏ) என்னும் பந்தியின்கீழ் தாபிக்கப்பட்ட தேசிய கடற்றொழில் மற்றும் கடலோரப் பயிற்சி நிறுவகத்தின் உறுப்பினர்களாக வருதல் வேண்டும். அத்தகைய அலுவலர்கள் மற்றும் சேவையாளர்கள் நிறுவகத்தில் அவர்களின் தொழில் நியதிகளிலும்பார்க்க அனுகூலம் குறைந்தனவாகவிராத நியதிகளின்மீது தொழிலுக்கமர்த்தப்படுதலும் வேண்டுமென்பதுடன் நிறுவகத்திற்கு அவர்களால் அளிக்கப்பட்ட சேவைக்காலப் பகுதியானது பல்கலைக்கழகத்திற்கு அவர்களால் அளிக்கப்பட்ட சேவையொன்றாக கருதப்படுதலும் வேண்டும்.

(3) நிறுவகத்தின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் பல்கலைக்கழகத்தில் அல்லது 5 ஆம் பிரிவின் (ஏ) என்னும் பந்தியின்கீழ் தாபிக்கப்பட்ட தேசிய கடற்றொழில் மற்றும் கடலோர பயிற்சி நிறுவகத்தில், தொழிலை ஏற்பதற்கு விருப்பம் தெரிவிக்காதவிடத்து, விடயத்துக்கேற்ப, அத்தகைய அலுவலர் அல்லது சேவையாளர் 71 ஆம் பிரிவின் (1) உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து இளைப்பாறியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அலுவலர் அல்லது சேவையாளர் அவரது இளைப்பாற்று வயதையடைந்த பின்னர் நிறுவகத்திலான சேவையிலிருந்து அவர் இளைப்பாறியிருப்பின் அவர் எந்த இளைப்பாற்று நன்மைகளுக்கு உரித்துடையவராக இருந்திருப்பாரோ அந்த இளைப்பாற்று நன்மைகளுக்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

*1999 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, தேசிய கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் நிறுவகச் சட்டத்தை நீக்குதல்.*

**71.** (1) ஆயிரத்துத்தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதாம் ஆண்டின் 36 ஆம் இலக்க, தேசிய கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் நிறுவகச் சட்டம், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் குறித்துரைக்க வேண்டியவாறான அத்தகைய தேதியிலிருந்து நீக்கப்பட்டதாதல் வேண்டும் ; ஆயின், அவ்வாறு குறித்துரைக்கப்படவேண்டிய தேதி, நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குப் பின்னரானதாக ஆனால் ஆறு மாதங்களினுள்ளானதாகவிருத்தல் வேண்டும்.

(2) மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் மேற்குறிப்பிடப்பட்ட நீக்கம் எவ்வாறிருப்பினும், இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்தும் அதன்பின்னரும் –

(அ) தேசிய கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் நிறுவகத்தின் எல்லா அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனமும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து பல்கலைக்கழகத்துக்கு உரித்தாதல் வேண்டும் ;

(ஆ) தேசிய கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் நிறுவகத்தினால் அல்லது அதனுடன் செய்துகொள்ளப்பட்டவையும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட

கட்டளையிற் குறித்தரைக்கப்பட்ட தேதிக்கு நேர்முற் போந்த நாளன்று உள்ளவையுமான எல்லா ஒப்பந் தங்களும் உடன்படிக்கைகளும், பல்கலைக்கழகத் தினால் அல்லது அதனுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களாகவும் உடன்படிக்கைகளாகவும் கருதப் படுதல் வேண்டும் ;

(இ) (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று தேசிய கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் நிறுவகத்தின் நிதியத்தினது வரவுக்கிருக்கும் எல்லாப் பணத்தொகைகளும், இச்சட்டத்தின் **43** ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட நிதியத்துக்கு அத்தேதியிலிருந்து கைமாற் றப்பட்டனவாதல் வேண்டும் ; அத்துடன்

(ஈ) (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையிற் குறித் துரைக்கப்பட்ட தேதிக்கு நேர்முந்போந்த நாளன்றுள்ள வாறு தேசிய கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திர வியல் நிறுவகத்தின் எல்லாப் பொறுப்புக்களும் பல்கலைக்கழகத்தின் பொறுப்புக்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்